# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/40 - 2023 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2023.02.14

*2319/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80 (30)*

***1980 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, உணவுச் சட்டம்***

*1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2023, சனவரி 17.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2024, சனவரி மாதம் 01 ஆந் திகதி அன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆளொருவர், பொதியொன்றில் அல்லது கொள்கலனொன்றில் அடங்கியுள்ள ஏதேனும் உணவுப் பொருளை அத்தகைய பொதி அல்லது கொள்கலன் இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க சுட்டுத்துண்டிடப்பட்டாலேயொழிய இறக்குமதிசெய்தலோ, இடம்பெயர்த்துதலோ, விநியோகித்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலோ அல்லது விற்பனைக்கு வைத்திருத்தலோ அல்லது விற்பனைக்கு விளம்பரப்படுத்துதலோ ஆகாது:

   ஆயின், உணவானது தன்மையில், தரத்தில், அளவில், தோற்றுவாயில் அல்லது வர்த்தகக் குறியில் கொள்வனவு செய்பவரினால் கோரப்பட்டிருந்தும் அத்துடன் கொள்வனவு செய்பவரின் முன்னிலையில் நிறுக்கப்பட்டும், எண்ணப்பட்டும் அல்லது அளக்கப்பட்டும் இருப்பின், சில்லறை விற்பனைக்கான எவையேனும் சிப்பங்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதலாகாது.


1A - PG 6221 — 4506 (2023/02)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3. (1)* பொதி அல்லது கொள்கலன் சுட்டுத்துண்டு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்தகையதொரு பொதி அல்லது கொள்கலனில் அடங்கியுள்ள உணவு தொடர்பில் அதன் மீது வெளிப்படுத்துகையொன்று, தெளிவாகவும் துலாம்பரமாகவும் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

*(2)* சுட்டுத்துண்டானது, உற்பத்தியாளரினால், பொதியிடுபவரினால் அல்லது விநியோகிப்பவரினால் உணவுப் பொதியின் அல்லது கொள்கலத்தின் மீது அழியாதவாறு அச்சிடப்பட்டு அல்லது பூச்சிடப்பட்டு அல்லது உறுதியாக இணைக்கப்பட்டு ஒட்டப்படுதல் வேண்டும்.

*(3)* ஆளொருவர் உற்பத்தியாளரால் அல்லது பொதியிடுபவரால் அச்சிடப்பட்ட, பூச்சிடப்பட்ட அல்லது வெளிக்காட்டப்பட்ட மூல உற்பத்தித் தேதி, பொதியிடுதல் தேதி அல்லது காலாவதியாகும் தேதியை உருவழித்தலோ, உருக்குலைத்தலோ, அழித்தலோ அல்லது துடைத்தழித்தலோ ஆகாது.

*(4)* இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொதி அல்லது கொள்கலன் ஒன்றின் மீது மூன்று மொழிகளுள் ஏதேனும் ஒரு மொழியில் சுட்டுத்துண்டொன்று ஒட்டப்பட்டுள்ளவிடத்தும் ஒழுங்குவிதிகளுக்கு இசைந்தொழுகும் குறைநிரப்பு சுட்டுத்துண்டொன்று ஏனைய இருமொழிகளில் அத்தகைய பொதி அல்லது கொள்கலனின் மீது துலாம்பரமாகவும் முக்கியமாக தடித்த எழுத்திலும் அழியாதவாறு அச்சிடப்பட்டு அல்லது பூச்சிடப்பட்டு அல்லது உறுதியாக ஒட்டப்பட்டும் காணப்படுமிடத்தும் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாகவிருக்கும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய குறைநிரப்பு சுட்டுத்துண்டு, இவ்வொழுங்குவிதிகளின் 3(4)ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் நோக்கத்துக்காக ஒட்டப்பட்டுள்ளவிடத்து, குறைநிரப்பு சுட்டுத்துண்டானது, உற்பத்தித் தேதி, பொதியிடும் தேதி அல்லது காலாவதியாகும் தேதி தொடர்பிலான தகவல்கள் மற்றும் வேறு பணிப்பாணைசார் தகவல்களைக் கொண்டிருப்பின், அத்தகைய குறைநிரப்பு சுட்டுத்துண்டு, உற்பத்தியாளரினால் அல்லது பொதியிடுபவரினால் வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட மூல உற்பத்தித் தேதி, பொதியிடும் தேதி, காலாவதியாகும் தேதி மற்றும் வேறு தகவல்களை உருக்குலைக்காத, உருவழிக்காத அல்லது துடைத்தழிக்காத முறையொன்றில் உறுதியாக ஒட்டப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், சுங்க விடுவிப்புக்கு முன்னர் இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகும் நோக்கங்களுக்காக சுங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட பண்டங்களுக்கு இடம்பெயர்த்தப்படும் அல்லது அவற்றில் வைக்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள், 2ஆம் ஒழுங்குவிதியின் கீழான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன.

*4. (1)* பின்வரும் வெளிப்படுத்துகைகள் பிரதான முகுப்பின் மீது அழியாதவாறும் வாசிக்கத்தக்க வகையிலும் செய்யப்படுதல் வேண்டும்

(அ) மூன்று மொழிகளிலும் தடித்த எழுத்தில் உற்பத்திப் பொருளின் பொதுப் பெயர்;

ஆயின் பொதுப்பெயரானது இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறு வேறு ஏதேனும் பெயரினால் பதிலீடு செய்யப்படலாம்;

(ஆ) எவரேனும் ஆளை ஏமாற்றும் தன்மையுடையதாக அல்லது பிழைவழியுய்க்கின்றதாக இருக்கமுடியாத முறையொன்றில் மூன்று மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியில் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் வியாபாரப் பெயர் மற்றும் வர்த்தகப் பெயர் (ஏதேனுமிருப்பின்);

எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக வர்த்தகப்பெயர் ஒன்று அல்லது வியாபாரப் பெயர் ஒன்று நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் -

(i) வேறொரு உணவு உற்பத்திப்பொருள் அல்லது பகுதியை அடையாளம் காணப்பயன்படுத்தப்படும் பொதுப்பெயர் ஒன்றை;

(ii) (உணவின்) உடற்றொழியியல்சார், உயிர் இரசாயனவியல்சார் அல்லது உளவியல்சார் தொழிற்பாடொன்றை;

(iii) உடலாரோக்கியம்சார் விளைவு அல்லது வெளிப்பாடொன்றை,

உட்கிடையாகக் கூறுகின்றவிடத்து, அது பாவனையாளரை ஏமாற்றும் தன்மையுடையதாக அல்லது பிழைவழியுய்ப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) திண்மப்பொருட்களின் விடயத்தில் எஸ்ஐ (SI) கூறுகளில் அல்லது சர்வதேச குறியீடுகளான 'கி' அல்லது 'கி.கி' என்பவற்றினாலும் திரவப்பொருட்களின் விடயத்தில் 'மி.லீ' அல்லது 'லீ' என்பவற்றில் கூறப்பட்ட பொதியின் அல்லது கொள்கலனின் தேறிய உள்ளீடுகள் அத்துடன் திரவ வடிவத்தில் பொதியிடப்பட்டிருப்பின் 'கி' அல்லது 'கி.கி' எனக் கூறப்பட்ட வடிக்கப்பட்ட தேறிய எடை:

(2) (அ) பின்வரும் வெளிப்படுத்துகைகள், மூன்று மொழிகளின் ஏதேனும் ஒரு மொழியில் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் ஏதேனும் முகப்பின்மீது அழியாதவாறும் வாசிக்கத்தக்க வகையிலும் செய்யப்படுதல் வேண்டும் -

(i) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் அனுமதிக்கப்பட்ட உணவுச் சேர்மானப் பொருளின் பொதுப் பெயர் மற்றும் ஐ.என்.எஸ் (INS) இலக்கத்தினாலான அவ்வுணவுச் சேர்மானப் பொருள் உட்பட உணவு உற்பத்தியின் போது உள்வரும் எடையின் (m/m) இறங்கு வரிசையில் அவற்றின் பொதுப் பெயரினால் உணவில் பயன்படுத்தப்பட்ட கலவைக் கூறுகளின் முழுமையான பட்டியலொன்று.

எவ்வாறாயினும், உணவுகளுக்கு உள்ளடக்கப்படாத செய்முறைப்படுத்தல் துணைப்பொருட்கள், கலவைக் கூறுகள் நிரலில் உள்ள வெளிப்படுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன;

(ii) (அ) உற்பத்தியாளர் மற்றும் விநியோகிப்பவரின் பெயரும் முகவரியும், இறக்குமதி செய்யப்பட்ட உணவு உற்பத்திப்பொருட்களின் விடயத்தில் மேலதிகமாக இறக்குமதி செய்பவரின் பெயர் மற்றும் முகவரி;

(ஆ) பொதியிடுபவரின் பெயர் மற்றும் முகவரி எவையேனும் இருப்பின் அவை;

(iii) தொகுதியிலக்கம் அல்லது குறியீட்டிலக்கம் அல்லது புரியக்கூடிய இரகசியமான குறியீட்டு அடையாளம்;

(iv) உற்பத்தித் தேதி;

(v) காலாவதியாகும் தேதி;

(vi) உணவுகள் தொகையாக இறக்குமதிசெய்யப்பட்டு மீளப் பொதியிடப்படுகின்ற விடயத்தில், உற்பத்தித் தேதி மற்றும் மீளப் பொதியிடப்பட்ட தேதி;

(vii) இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விடயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நாடு;

(viii) 1.5 மில்லிமீற்றருக்குக் குறையாத எழுத்துரு அளவுடைய எழுத்துக்களில் போசணைசார் சுட்டுத்துண்டிடல்;

(ix) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்பட்ட வேறு எவையேனும் வெளிப்படுத்துகைகள்.

(ஆ) சட்டத்தின்கீழ் எவையேனும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பாவனையாளர் எச்சரிக்கைகள் எவையேனும் இருப்பின் அவை 1.5 மில்லிமீற்றருக்குக் குறையாத எழுத்துரு அளவுடைய எழுத்துக்களில் மூன்று மொழிகளில்;

(இ) காலாவதியாகும் தேதி, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எவையேனும் இரண்டில் ஏதேனும் முகப்பின் மீது காணப்படுதல் வேண்டும்:

ஆயின், போத்தலில் அடைக்கப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களின் விடயத்தில், காலாவதியாகும் தேதி, தொகுதியிலக்கம் மற்றும் உற்பத்தித் தேதி 1.5 மில்லிமீற்றருக்குக் குறையாத எழுத்து அளவைப் பயன்படுத்தி போத்தலின் கழுத்துப்பகுதியில் அழியாதவாறும் வாசிக்கத்தக்க வகையிலும் முத்திரையிடப்படலாம். உணவுப்பொருளைக் கொண்டுள்ள உலோகக் கலன்களின் விடயத்தில், காலாவதியாகும் தேதி, தொகுதியிலக்கம் மற்றும் உற்பத்தித் தேதி, கலனின் மூடியின் மீதோ கலனின் மேல் அல்லது அடிப்பக்கத்தில் அழியாதவாறும் வாசிக்கத்தக்க வகையிலும் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்:

ஆயின் மேலும், மொத்த விற்பனைச் சிப்பங்களில் உள்ள சீனி, தேயிலை, தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளுக்கும் புதிய காய்கறிகள், பழங்கள், வேர்கள், மற்றும் கிழங்குகள் அத்துடன் துண்டுகளாக வெட்டப்பட்ட பாண் தவிர்ந்த பாண் என்பவற்றுக்கு காலாவதியாகும் தேதி தேவைப்படுத்தப்படமாட்டாது.

(ஈ) களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் எவையேனும் இருப்பின் அவை, மூன்று மொழிகளில் குறைந்தபட்சம் இரண்டு மொழிகளில்; பொதியின் மேற்பரப்பு சிறியதாகவுள்ளவிடத்து இரு மொழிகளைப் பயன்படுத்துவதற்கான விதிவிலக்குகள், விடயம் என்ற அடிப்படையில் பிரதான உணவு அதிகாரியினால் வழங்கப்படமுடியும்.

(3) இவ்வவொழுங்குவிதியின் ஏற்பாடுகள், 25 கிராமினை விஞ்சாத நிறையை உடைய அல்லது கனவளவு 30 மில்லிமீற்றரை விஞ்சாத, முன்னரே பொதியிடப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்புடையனவாதலாகாது. ஆயின், எந்த வழங்கும் பொதி அல்லது கொள்கலனிலிருந்து அவை வழக்கமாக வாங்குநருக்கு விற்கப்படுகின்றதோ அந்தப் பொதி அல்லது கொள்கலன் விற்பனை இடத்தில் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் இவ்வொழுங்குவிதிக்கு இணங்க சுட்டுத்துண்டு இடப்படுதலும் வேண்டும்.

(4) ஆளொருவர், ஏதேனும் உணவுப்பொருளின் காலாவதித் தேதியின் பின்னர் அதனை விற்பனை செய்தல், விற்பனைக்கு முனைதல், விற்பனைக்காக வெளிக்காட்டிவைத்தல் அல்லது விற்பனைக்காக வைத்தல், விற்பனைக்காக இடம்பெயர்த்தல் ஆகாது.

(5) தேயிலை, வாசனைத் திரவியங்கள், உண்ணத்தக்க எண்ணெய்கள், உண்ணத்தக்க உப்பு, தானியங்கள், முழுமையானதும் பிளவுபட்டதுமான பருப்பு வகைகள் மற்றும் உண்ணத்தக்க எண்ணெய் விதைகள் தொடர்பில், பொதியிடல் தேதி உற்பத்தித் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், பொதியிடுபவரானவர், பொதியிடுதலின் போது உற்பத்திப்பொருள் மனித நுகர்வுக்கு ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதும் என உறுதிப்படுத்த வேண்டும்.

(6) போசணைசார் சுட்டுத்துண்டிடல் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்டவாறு பணிப்பாணை முறையாதல் வேண்டும்.

5. நான்காம் ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக:-

(அ) பொதுப் பெயருக்காகப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் அளவு, குறைந்தபட்சம் 3 மில்லிமீற்றர் உயரத்துடன் வியாபாரப்பெயர் அல்லது வர்த்தகப் பெயர்களில் எது பெரியதோ, அதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் அளவின் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாததாகவிருத்தல் வேண்டும். பொதுப் பெயரானது ஒரு சொல் அல்லது ஒரு சொல்லுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டிருப்பின் அத்தகைய சொல் அல்லது சொற்கள் (தீர்மானிகள், இணைப்புச் சொற்கள் அல்லது முன்னிடைச் சொற்கள் தவிர்ந்த) ஒரே மாதிரியான வகையிலும் அளவிலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒத்த வகையில் வெளிக்காட்டப்படுதலும் வேண்டும்.

(ஆ) குறைந்தபட்சம் 3 மில்லிமீற்றர் உயரத்துக்கு அமைய, 3(4) ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு குறைநிரப்பு சுட்டுத்துண்டில் பொதுப் பெயருக்காக பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் உயரம், பொதி அல்லது கொள்கலனின் பிரதான முகப்பின் மீது பொதுப் பெயருக்காகப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் உயரத்தின் ஓர் அரை மடங்கு உயரத்துக்குக் குறைந்ததாக இருத்தல் ஆகாது.

(இ) சுட்டுத்துண்டின் மீது உள்ள எழுத்துக்கள், எண்கள், மற்றும் சின்னங்கள் வாசிக்கத்தக்கதாகவும் வெற்றுக் கண்ணுக்கு புலப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றின் பின்னணி நிறத்திலிருந்து வித்தியாசப்படும் வகையில் அடையாளம் காணப்படத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நான்காம் ஒழுங்குவிதியின் தேறிய உள்ளீடுகள், உற்பத்தித் தேதி மற்றும் காலாவதியாகும் தேதியின் வெளிப்படுத்துகைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள், தடித்த எழுத்திலும், அட்டவணை II இன் நிரல் II இன் நேரொத்த பதிவில் தரப்பட்ட சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் பரப்பளவு தொடர்பில் இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட உயரத்திற்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) 4(1), 4(2)(அ)(iv) மற்றும் 4(2)(அ)(v) என்னும் ஒழுங்குவிதிகளின் வெளிப்படுத்துகைகள் தவிர்ந்த வெளிப்படுத்துகைகள் உயரத்தில் 1.5 மில்லிமீற்றருக்குக் குறையாத தடித்த எழுத்துக்களில் துலாம்பரமாக அச்சிடப்படல் வேண்டும்.

(ஊ) (i) பொதி ஒன்றில் அல்லது கொள்கலன் ஒன்றில் அடங்கியுள்ள உணவுப் பொருள் தொடர்பில், காலாவதியாகும் தேதி, பின்வருவனற்றின் நியதிகளின்படி கூறப்படுதல் வேண்டும் -

(அ) நாள், மாதம் மற்றும் ஆண்டு;

(ஆ) ஆண்டு, மாதம் மற்றும் நாள்; அல்லது

(இ) மாதம் மற்றும் ஆண்டு.

(ii) ஆண்டானது நான்கு எண் வடிவத்தில் கூறப்படுகின்றவிடத்து, வடிவமானது ஒன்றில் நாள், மாதம் மற்றும் ஆண்டு அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாள் என்றவாறு இருக்கலாம்.

(iii) ஆண்டானது இரண்டு எண் வடிவத்தில் கூறப்படுகின்றவிடத்து, வடிவமானது நாள், மாதம் மற்றும் ஆண்டு அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாள் என இருத்தல் வேண்டும். ஆயின் விடயத்துக்கேற்ப நாள், மாதம் மற்றும் ஆண்டை குறிக்கும் நாநா/மாமா/ஆஆ அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாளைக் குறிக்கும் ஆஆ/மாமா/நாநா என்ற சுட்டிகள் எண் வடிவங்களுக்கு மேலே அல்லது மிக்க அண்மையில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(iv) காலாவதியாகும் தேதியாக மாதம் மற்றும் ஆண்டு மட்டும் சுட்டிக்காட்டப்படுகின்றவிடத்து, வடிவமானது மாதம் மற்றும் ஆண்டு அல்லது ஆண்டு மற்றும் மாதமாக இருத்தல் வேண்டும். ஆயின் விடயத்துக்கேற்ப மாதம் மற்றும் ஆண்டைக் குறிக்கும் மாமா/ஆஆ அல்லது ஆண்டு மற்றும் மாதத்தைக் குறிக்கும் ஆஆ/மாமா என்ற சுட்டிகள் எண் வடிவங்களுக்கு மேலே அல்லது மிக்க அண்மையில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(v) காலாவதியாகும் தேதியாக மாதம் மற்றும் ஆண்டு மட்டும் சுட்டிக்காட்டப்படுகின்றவிடத்து, அவ்வுற்பத்திப் பொருளின் காலாவதியாகும் தேதி, அம்மாதத்தின் கடைசி நாளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(vi) காலாவதியாகும் தேதியானது ஒன்றில் 'காலாவதி' அல்லது 'ஆம் திகதிக்கு முன்னர் பயன்படுத்துக' அல்லது 'ஆம் திகதியளவில் பயன்படுத்துக' அல்லது 'ஆம் திகதிக்கு முன் மிக நல்லது' என்னும் சொற்கள் அல்லது சிங்களத்தில் 'කා.ඉ.දි.' மற்றும் தமிழில் 'கா.தேதி' உடன் சேர்த்து ஆங்கிலத்தில் 'Exp" என்னும் சுருக்கீடு அதற்கு முன்னால் இடப்பட்டு எண் வடிவத்தில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(எ) (i) பொதி ஒன்றில் அல்லது கொள்கலனொன்றில் அடங்கியுள்ள உணவுப் பொருள் தொடர்பில் உற்பத்தித் தேதி (அ) நாள், மாதம் மற்றும் ஆண்டு; அல்லது (ஆ) ஆண்டு, மாதம் மற்றும் நாள் என்பவற்றின் நியதிகளின் படி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) ஆண்டானது நான்கு எண் வடிவங்களில் கூறப்படுகின்றவிடத்து, வடிவமானது ஒன்றில் நாள், மாதம் மற்றும் ஆண்டு அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாள் என்றவாறு இருக்கலாம்.

(iii) ஆண்டானது இரண்டு எண் வடிவத்தில் கூறப்படுகின்றவிடத்து, வடிவமானது நாள், மாதம் ஆண்டு அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாள் என இருத்தல் வேண்டும். ஆயின் விடயத்துக்கேற்ப நாள், மாதம் மற்றும் ஆண்டை குறிக்கும் நாநா/மாமா/ஆஆ அல்லது ஆண்டு, மாதம் மற்றும் நாளைக் குறிக்கும் ஆஆ/மாமா/நாநா என்ற சுட்டிகள் எண் வடிவங்களுக்கு மேலே அல்லது மிக்க அண்மையில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(iv) உற்பத்தி தேதியானது ஒன்றில் 'உற்பத்தித் தேதி' அல்லது 'உற்பத்தி செய்த தேதி' அல்லது 'ஆம் தேதியன்று உற்பத்தி செய்யப்பட்டது' என்னும் சொல் அல்லது சொற்கள் அல்லது சிங்களத்தில் 'නි.දි.'. அல்லது தமிழில் 'உ.தேதி' உடன் சேர்த்து ஆங்கிலத்தில் 'MFD' என்னும் சுருக்கீடு அதற்கு முன்னால் இடப்பட்டு எண் வடிவத்தில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. (1) ஏதேனும் உண்ணத்தக்க எண்ணெயானது, (ஏதேனும் சுத்தீகரிக்கப்பட்ட எண்ணெய் உட்பட) அதன் பொதுப் பெயரையும் மிக்க அண்மையில் தோற்றுவாய் மூலத்தையும் ஒரே எழுத்துரு, அளவு மற்றும் நிறத்தில் தெளிவாகவும் துலாம்பரமாகவும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) எவையேனும் இனிப்புப் பண்டங்களின் அல்லது சொக்கலேற்று உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கொழுப்பு, வெண்ணெய்க் கொழுப்பின் நான்கு சதவீதத்துக்குக் குறையாத (4%) நிறையைக் கொண்டிருந்தாலேயொழிய அத்தகைய இனிப்புப் பண்டங்கள் அல்லது சொக்கலேற்று உற்பத்திப் பொருள்களின் விவரணத்தில்;

(ஆ) எவையேனும் மாப் பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கொழுப்பு, முழுமையாகவே வெண்ணெய்க் கொழுப்பைக் கொண்டிருந்தாலேயொழிய அத்தகைய மாப் பண்டங்களின் விவரணத்தில்,

சுட்டுத்துண்டெதுவும், 'வெண்ணெய்' என்னும் சொல்லை அல்லது அதன் ஏதேனும் ஒத்த கருத்துச் சொல்லை அல்லது வெண்ணெய்யின் உள்ளடக்கத்தை உட்கிடையாகக் கூறும் ஏதேனும் சொல்லை கொண்டிருத்தல் ஆகாது.

7. (1) முற்பொதியிடப்பட்ட உணவுப்பொருள், எந்த ஏதேனும் வேறு உற்பத்திப் பொருளுடன் அத்தகைய உணவுப் பொருள் குழப்பமடையுமோ அந்த ஏதேனும் வேறு உற்பத்திப் பொருளை ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் குறிப்பிடும் அல்லது கருத்துரைக்கும் சொற்களினால், படம்சார் அல்லது வேறு உபாயங்களினால் அல்லது அத்தகைய வேறு உற்பத்திப் பொருளுடன் அவ்வுணவுப் பொருள் சம்பந்தப்படுகின்றது என ஊகிப்பதற்கு கொள்வனவாளரை அல்லது பாவனையாளரை பிழைவழியுய்க்கின்ற அத்தகைய முறையொன்றில் ஏதேனும் சுட்டுத்துண்டின்மீது விபரிக்கப்படுதல் அல்லது முன்வைக்கப்படுதல் ஆகாது.

(2) நேரடி நுகர்வுக்கான அல்லது மீண்டும் கலந்து தயாரிக்கப்படுதவற்காக இருக்கும் பழத்தை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் எவையும் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட அளவுகளுக்கு இணங்க அத்தகைய பழத்தின் பழச்சாற்றின் அளவை அது கொண்டிருந்தாலேயொழிய, குறிப்பிடப்பட்ட பழச்சாற்றினால் தயாரிக்கப்பட்ட குடிபானம் என ஏதேனும் சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் விபரிக்கப்படுதலாகாது. அவ்வாறில்லாதுவிடின் விடயத்துக்கேற்ப 'செயற்கைப் பழச்சாறு', 'செயற்கைப்பழப்பிழிவு' அல்லது 'செயற்கைக் குடிபானம்' என விபரிக்கப்படுதல் வேண்டும்.

(3) தாவர உற்பத்திப் பொருளொன்றின் நொதித்தல் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வினாகிரிகளைத் தவிர்ந்த ஏனைய வினாகிரியைக்கொண்ட ஏதேனும் போத்தல் அல்லது கொள்கலன் மீது 'செயற்கையான வினாகிரி' என சுட்டுத்துண்டு இடப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2)ஆம் மற்றும் (3)ஆம் பந்தியில் 'செயற்கையானது' எனக் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உணவுப் பொருள் உற்பத்தி தொடர்பான ஏதேனும் சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் -

(அ) உற்பத்திப் பொருளின் பெயருக்கு மிக்க அண்மையில் 'செயற்கையானது' என்னும் சொல்லை தெளிவாகவும் துலாம்பரமாகவும் அதன்மீது கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சொல்லின் எழுத்துக்களின் வகை, வர்ணம் மற்றும் அளவு, உற்பத்திப் பொருளின் பொதுப் பெயருக்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் அதே வகை, வர்ணம் மற்றும் அளவாக இருத்தலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய உற்பத்திப் பொருளின் விவரணத்தில் 'பழம்' என்னும் சொல்லையோ அல்லது ஏதேனும் பழத்தின் படம்சார் பிரதிநிதித்துவத்தையோ கொண்டிருத்தல் ஆகாது;

(இ) ஏதேனும் வினாகிரி தொடர்பான தாவரம் அல்லது தாவர உற்பத்திப் பொருளின் ஏதேனும் படம்சார் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருத்தலாகாது.

8. (1) இனிப்புப் பண்டங்கள், சொக்கலேற்றுக்கள் அல்லது விசுக்கோத்துக்கள் அல்லது எவையேனும் ஒத்த உற்பத்திப் பொருட்கள் பழங்களின் அடிப்படையின் அல்லாமல் உள்ளவிடத்தும் இயற்கை அல்லது செயற்கைச் சுவையூட்டப்பட்ட குடிபானக்கலவைகள், ஜெல்லி கிரிஸ்டல் மற்றும் புடிங் கலவைகள் பழ அடிப்படையில் அல்லாமல் உள்ளவிடத்தும் பழம் ஒன்றின் அல்லது பழங்களின் பெயர் அல்லது பழம் ஒன்றின் அல்லது பழங்களின் படம்சார் பிரதிநிதித்துவம் சுட்டுத்துண்டின் மீது குறிப்பிடப்படலாம்:

ஆயின், பழ அடிப்படையில் அல்லாத இயற்கை அல்லது செயற்கைச் சுவையூட்டப்பட்ட குடிபானக் கலவைகள், ஜெல்லி கிரிஸ்டல் மற்றும் புடிங் கலவைகளின் விடயத்தில், 'எக்ஸ்' சுவையூட்டப்பட்ட குடிபானக்கலவைகள்/ஜெல்லி கிரிஸ்டல்/புடிங் கலவை என்ற பொதுப்பெயர், 'எக்ஸ்' என்பது பழங்களின் பெயர் அல்லது பெயர்களாகவிருக்கின்றவிடத்து சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் மீது பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) சுவையூட்டும் பதார்த்தங்கள் நீங்கலாக, உணவுப்பொருளொன்றின் பண்பாக அமையும் கலவைக்கூறு ஒன்று அல்லது பண்பாக அமையும் ஆக்கக்கூறு உணவுப் பொருளொன்றின் பெயருடன் குறிப்பிடப்படுகின்றவிடத்து அல்லது இணைகின்றவிடத்து அல்லது சொற்கள், படங்கள் அல்லது வரைகலைகளில் சுட்டுத்துண்டின்மீது வலியுறுத்திக் கூறப்படுகின்றவிடத்து அதன் விகிதங்கள், கலவைக் கூறுகள் அல்லது ஆக்கக்கூறுகளின் பொது, விவரண, இனப் பெயரை உடனடுத்துப் பின்னர் உள்வரும் கலவைக்கூறுகளின் சதவீதம் ஒன்றாக சுட்டுத்துண்டின்மீது வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் உ+ம் 'எக்ஸ்' நூடில்ஸ் 'எக்ஸ்' என்பது பண்பாக அமையும் கலவைக்கூறாகும்.

9\. (1) ஏதேனும் உணவுப் பொருளுக்காக உணவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் நியமம் ஒன்று குறித்துரைக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய நியமங்களில் பெயரிடப்பட்டவாறான அத்தகைய கலவைக் கூறுகள் மட்டும் அத்தகைய உணவுப் பொருளில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். வேறு எவையேனும் கலவைக் கூறுகளைச் சேர்த்தல் அல்லது கலவைச்சேர்வை செய்தல் அத்தகைய கலவைக் கூறுகள் தொடர்பில் சுட்டுத்துண்டு ஒன்று அல்லது வெளிப்படுத்துகையுடன் இருப்பினும் சரி அல்லது இல்லாதுவிடினும்சரி தடைசெய்யப்படுதல் வேண்டும்.

(2) உணவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் நியமம் ஒன்று குறித்துரைக்கப்படாத ஏதேனும் உணவுப் பொருள், சேர்க்கையொன்றை, கலவைச்சேர்வையொன்றை அல்லது ஏதேனும் குறைபாட்டைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் அத்தகைய சேர்க்கை, கலவைச்சேர்வை அல்லது குறைபாட்டின் வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை, விடயத்துக்கேற்ப சேர்க்கை அல்லது கலவைச் சேர்வை அல்லது குறைபாட்டு கலவைக் கூறின் பெயர் மற்றும் சதவீதத்தைத் தெளிவாகக் கூறுதலும் வேண்டும்.

(3) (அ) உணவு உற்பத்திப் பொருள் ஒன்றிற்கு இனிப்பூட்டிகள் சேர்க்கப்படுகின்றவிடத்து, பின்வரும் கூற்றுக்கள் தடித்த பெரிய எழுத்துக்களில் குறைந்தபட்சம் 1.5 மி.மீ எழுத்துரு அளவில் தனிவேறாக சுட்டுத்துண்டின் மீது குறிப்பிடப்படுதல் வேண்டும்:

(i) 'அனுமதிக்கப்பட்ட 'எக்ஸ்' இனிப்பூட்டிகளை கொண்டுள்ளது' மற்றும் 'எக்ஸ்' என்னும் எழுத்துக்குப் பதிலாக பயன்படுத்தப்பட்ட எவையேனும் அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகளின் பெயர்கள்;

(ii) 'மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு விதந்துரைக்கப் படவில்லை'.

(ஆ) சந்தையில் கிடைக்கக்கூடியதாகவுள்ள உற்பத்தியாளரின் ஒத்த அல்லது மூல உற்பத்திப் பொருள் ஒன்றுடன் ஒப்பிடுகையில் குறைந்தபட்சம் 30 சதவீத சக்திக் குறைப்பு உள்ளவிடத்து, சீனிக்குப் பதிலாக பகுதியளவில் இனிப்பூட்டிகள் பயன்படுத்தப்படமுடியும் என்பதுடன் 'சக்தி குறைக்கப்பட்டது' என்ற வெளிப்படுத்துகையொன்று பெரிய எழுத்துக்களில் சுட்டுத்துண்டின் மீது செய்யவும்படலாம்.

(4) உணவு உற்பத்திப் பொருட்களுக்கு சுவை அதிகரிப்பான்கள் சேர்க்கப்படுகின்றவிடத்து, பின்வரும் கூற்றுக்கள் பெரிய எழுத்துக்களில் குறைந்தபட்சம் 1.5 மி.மீ எழுத்துரு அளவில் தனிவேறாக சுட்டுத்துண்டின் மீது குறிப்பிடப்படுதல் வேண்டும்:

(அ) " 'எக்ஸ்' சுவை அதிகரிப்பான்(கள்) சேர்க்கப்பட்டது' மற்றும் 'எக்ஸ்' என்னும் எழுத்துக்குப் பதிலாக சேர்க்கப்பட்ட எவையேனும் அனுமதிக்கப்பட்ட சுவை அதிகரிப்பான்களின் பெயர்கள் மற்றும் ஐஎன்எஸ் (INS) எண்கள்; அத்துடன்

(ஆ) 'மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு விதந்துரைக்கப்படவில்லை'.

(5) மரக்கறி அல்லது தாவர மூலத்தைக் கொண்ட உணவு உற்பத்திப்பொருள் ஒன்று ஏதேனும் விலங்கின மூலகலவைக்கூறைக் கொண்டிருப்பின், அவை விலங்கின மூலம் என்ற கூற்றொன்றுடன் அத்தகைய கலவைக்கூறுகளின் பெயர் அல்லது பெயர்கள் துலாம்பரமாகவும் வாசிக்கத்தக்கவகையிலும் சுட்டுத்துண்டின் மீது தடித்த எழுத்துக்களில் குறைந்தபட்சம் 1.5 மி.மீ எழுத்துரு அளவில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். பால் உற்பத்திப் பொருட்கள், பால் தவிர்ந்த விலங்கின மூல கலவைக் கூறுகளை கொண்டிருந்தாலேயொழிய இத்தேவைப்பாட்டிலிருந்து விதிவிலக்களிக்கப்படுகின்றன.

10. (1) அயனாக்கக் கதிர்வீச்சினால் பரிகரிக்கப்பட்டுள்ள உணவுப் பொருளொன்றின் சுட்டுத்துண்டு, உணவுப் பொருளின் பொதுப் பெயருக்கு மிக்க அண்மையில் அப் பரிகரிப்பைச் சுட்டிக்காட்டும் எழுத்திலான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். கீழே கொடுக்கப்பட்ட சர்வதேச சின்னம் பொதுப் பெயருக்கு மிக்க அண்மையில் துலாம்பரமாக பச்சை நிறத்தில் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.

(2) கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் இன்னொரு உணவுப் பொருளில் கலவைக் கூறுகளாக பயன்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய உற்பத்திப் பொருட்கள் இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அதே முறையில் கலவைக்கூறுகளின் நிரலில் தனிவேறாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட மூலப்பொருள் ஒன்றிலிருந்து ஒற்றைக் கலவைக்கூறு உற்பத்தியொன்று தயாரிக்கப்படும் போது, உற்பத்திப் பொருளின் சுட்டுத்துண்டு, அத்தகைய பரிகரிப்பை சுட்டிக்காட்டும் கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. பிரதான உணவு அதிகாரியினால் அளிக்கப்பட்ட எழுத்திலான அங்கீகாரத்தின் மீதன்றி, ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரமெதுவும் மருத்துவத் தொழிலர் ஒருவர் அல்லது கழகம் அல்லது எவரேனும் உயர்தொழிலரினால் அது விதந்துரைக்கப்படுகின்றது என சுட்டிக்காட்டும் சொற்களை அல்லது அத்தகைய உணவுப் பொருள் எவரேனும் மருத்துவத் தொழிலர், கழகம் அல்லது எவரேனும் உயர்தொழிலரினால் விதந்துரைக்கப்படுகின்றது, விதித்துரைக்கப்படுகின்றது அல்லது அங்கீகரிக்கப்படுகின்றது என உட்கிடையாகக்கூறும் அல்லது கருத்துரைக்கும் வேறு எவையேனும் சொற்கள் அல்லது உபாயம், படங்கள் அல்லது வேறு வகையானதைக் கொண்டிருத்தல் ஆகாது.

12. (1) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும் அத்தகைய உணவுப் பொருளைக் கொள்வனவு செய்பவரை அல்லது அதன் பாவனையாளரை பிழைவழியுய்க்கின்ற அத்தகைய முறையொன்றில் அத்தகைய உணவுப் பொருளின் பொய்யான உரிமைக்கோரிக்கை அல்லது பிழைவழியுய்க்கும் விவரணத்தைக் கொண்டிருத்தல் ஆகாது.

(2) உணவுப்பொருள் எதுவும் அதன் பண்பு தொடர்பான ஏதேனும் அம்சத்தில் பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது ஏமாற்றும் அல்லது பிழையான அபிப்பிராயத்தை உருவாக்கும் சாத்தியம் கொண்ட முறையொன்றில் விவரிக்கப்படுதல் அல்லது முன்வைக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக 'உரிமைக்கோரிக்கை' என்பது, உணவுப் பொருள் ஒன்று அதன் தோற்றுவாய், போசணைசார் அம்சங்கள், தன்மை, தயாரிப்பு, பதனிடுதல், அமைப்பு தொடர்பான குறிப்பிட்ட பண்புகளை அல்லது வேறு ஏதேனும் பண்பைக் கொண்டுள்ளது எனக் கூறும், தெரிவிக்கும் அல்லது உட்கிடையாகக்கூறும் ஏதேனும் பிரதிநிதித்துவம் எனப் பொருள்படும்.

(4) எந்த உணவுப் பொருளுக்கு போசணை உரிமைக் கோரிக்கையொன்று, ஊட்டப்பொருள் உள்ளீட்டு உரிமைக் கோரிக்கையொன்று, ஊட்டப்பொருள் ஒப்பீட்டளவிலான உரிமைக்கோரிக்கை ஒன்று அல்லது சுகாதார உரிமைக் கோரிக்கை ஒன்று செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் உணவுப் பொருள் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட போசணைசார் சுட்டுத்துண்டிடுதலுடன் இணங்கியதாகவிருத்தல் வேண்டும்.

(5) (அ) அனுமதிக்கப்பட்ட ஊட்டப்பொருள் உள்ளீட்டு உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஊட்டப்பொருள் ஒப்பீட்டளவிலான உரிமைக் கோரிக்கைகள், இதற்கான அட்டவணை V இல் ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் (NRVs) குறித்துரைக்கப்பட்ட புரதச்சத்து, உணவுசார் நார்ப்பொருள், விட்டமின்கள் மற்றும் கனிப்பொருட்கள் தொடர்பானதாகவிருத்தல் வேண்டும். ஊட்டப்பொருளுக்கான ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமானம் (NRVs) அட்டவணை V இல் குறித்துரைக்கப்படாதிருப்பின், எழுத்திலான முன்னங்கீகாரம் பிரதான உணவு அதிகாரியிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், இதற்கான அட்டவணை VI மற்றும் VII இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் அமைந்தொழுகப்பட்டாலேயொழிய ஊட்டப்பொருள் உள்ளீட்டு உரிமைக்கோரிக்கை ஒன்றை அல்லது ஊட்டப்பொருள் ஒப்பீட்டளவிலான உரிமைக்கோரிக்கையைக் கொண்டிருத்தலாகாது.

(இ) ஏற்புடையதாகவிடத்து, ஊட்டப்பொருள் உள்ளீட்டு உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஊட்டப்பொருள் ஒப்பீட்டளவிலான உரிமைக்கோரிக்கைகளுக்கான நிபந்தனைகள், இதற்கான அட்டவணைகள் VI மற்றும் VII இற்கு இணங்க “கூடிய”, “குறைந்த”, “குறைக்கப்பட்ட” மற்றும் “அற்ற” என்பவற்றிற்கான மட்டங்களைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) ஊட்டப்பொருள் ஒன்றின் செறிவூட்டல் மட்டம் ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதியின் (NRVs) மூன்றில் ஒரு பங்கை (⅓) விஞ்சுவதாயின், எழுத்திலான முன்னங்கீகாரம், அத்தகைய உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்துவதற்கு முன்னர் பிரதான உணவு அதிகாரியிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(6) (அ) ஒவ்வொரு சுகாதார உரிமைக்கோரிக்கையும் ஊட்டப்பொருள் செயற்பாட்டு உரிமைக்கோரிக்கையும், உணவுப்பொருளின் சுட்டுத்துண்டு அல்லது விளம்பரத்தின் மீது உரிமைக்கோரிக்கை யொன்று செய்யப்பட முடியுமாகவிருப்பதற்கு முன்னர் பிரதான உணவு அதிகாரியின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அட்டவணை V இல் தரப்பட்டவாறு எந்த உணவுப்பொருளிலான ஆக்கக்கூறு ஒன்றுக்கு ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதி ஒன்று தாபிக்கப்படுகின்றதோ அந்த உணவுப்பொருளிலான ஆக்கக்கூறு ஒன்றுக்கு உரிமைகோரப்பட்ட நன்மை ஏற்றிக் கூறப்படின், சம்பந்தப்பட்ட உணவுப்பொருள் -

(i) அதிகரிக்கப்பட்ட பாவனை விதந்துரைக்கப்படும் விடயத்தில் ஆக்கக் கூறின் “மூலம்” ஒன்றாக அல்லது “கூடுதலாக” இருத்தல் வேண்டும்; அல்லது

(ii) குறைக்கப்பட்ட பாவனை விதந்துரைக்கப்படும் விடயத்தில் ஆக்கக்கூறின் “குறைவான”, “குறைக்கப்பட்ட” அல்லது ‘அற்றது” என இருத்தல் வேண்டும்.

(இ) எந்த ஊட்டப்பொருட்களுக்காக ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதி (NRVs) ஒன்று இதற்கான அட்டவணை V இல் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த ஊட்டப்பொருட்கள் மட்டும் ஊட்டப்பொருள் செயற்பாட்டு உரிமைக்கோரிக்கையொன்றின் விடயமாகவிருத்தல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் உரிமைக்கோரிக்கை ஏதேனும் உணவுப்பொருளின் மிகையான பாவனையை ஊக்குவிப்பின் அல்லது ஏற்றுக்கொள்ளின் அல்லது சிறந்த உணவுப் பழக்கவழக்கத்தை இழித்துரைப்பின், அவ்வுரிமைக்கோரிக்கை செய்யப்படுதலாகாது.

(7) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு எதுவும், அத்தகைய பொருள் உணவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட குணவியல்பு, பெறுமதி, கூட்டுப்பொருட்கள் மற்றும் தகைமைகளைக் கொண்டும் எவ்வகையினதுமான சேர்பெர்ருட்களைக் கொண்டும் இல்லாது இருந்தாலேயொழிய அத்தகைய பொருளின் விவரணத்தில் “தூய்மையானது” என்னும் சொல்லை அல்லது அது தூய்மையானது என உட்கிடையாகக் கூறும் வேறு ஏதேனும் சொல்லைக் கொண்டிருத்தலாகாது.

(8) ஏதேனும் உணவுப்பொருளின் விவரணத்தில் சுட்டுத்துண்டு எதுவும் -

(அ) அத்தகைய உணவுப்பொருள் சேர்பொருட்களைக் கொண்டு கலக்கப்படாத, கலப்படம் செய்யப்படாததான அல்லது பதனிடப்படாததான உற்பத்திப்பொருட்களைக் கொண்டிருந்தாலேயொழிய அதன் மீது “இயற்கையானது” என்னும் சொல்லைக் கொண்டிருத்தலாகாது. எவ்வாறாயினும் அது பாய்ச்சரூட்டம், வடிகட்டல், குளிரூட்டல் அல்லது உறைவித்தல் என்பவற்றிற்கு உட்படுத்தப்படலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய உணவுப்பொருள் செயற்கைப் பொருளிலிருந்து வேறுபட்ட உயிரியல் பொருளிலிருந்து உற்பத்திசெய்யப்பட்டாலேயொழிய “இயற்கையானது” என்னும் சொல்லைக் கொண்டிருத்தலாகாது.

(9) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு எதுவும், அத்தகைய உணவுப்பொருளின் விவரணத்தில் பயன்படுத்தப்படுவதற்கு சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய உணவுப்பொருள் அனுமதிக்கப்பட்டிருந்தாலேயொழிய அத்தகைய விவரணத்தில் "பதிலீடு" என்னும் சொல்லை அல்லது அது அத்தகைய உணவுப்பொருளுக்கான பதிலீடு ஒன்று என உட்கிடையாகக் கூறும் ஏதேனும் வேறு சொல்லைக் கொண்டிருத்தலாகாது.

(10) (அ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், அவ்வுணவுப்பொருளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தியாவசிய ஊட்டப்பொருட்கள் சாதாரணமாக காணப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி அத்தகைய உணவுப்பொருளுடன் அவை சேர்க்கப்பட்டிருந்தாலேயொழிய, அது ஒரு வலுவூட்டப்பட்ட உணவுப்பொருள் என சுட்டிக்காட்டப்படுதலாகாது, ஆயின் அத்தகைய சேர்க்கையின் உட்கருதப்பட்ட நோக்கம், மக்கள் மத்தியில் அத்தகைய ஊட்டப் பொருட்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊட்டப்பொருட்களின் வெளிப்படுத்தப்பட்ட குறைபாட்டை தடுப்பதற்கு அல்லது திருத்துவதற்காகும்.

(ஆ) உணவுப்பொருட்களுக்கு சேர்க்கப்படமுடியுமான அனுமதிக்கப்பட்ட விட்டமின்கள், கனிப்பொருட்கள், கொழுப்புச்சத்து அமிலங்கள், அமினோ அமிலங்கள் மற்றும் நியூக்லியோடைட்ஸ் என்பவற்றின் நிரல் இதற்கான அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்படுகின்றது.

(இ) பழ உற்பத்திப் பொருள் அல்லது மரக்கறி உற்பத்திப்பொருள் அல்லது சீனியை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப்பொருள் எதுவும், அத்தகைய உற்பத்திப்பொருள், உற்பத்திப்பொருளின் 100 கிராமுக்கு 40 மில்லிகிராமுக்குக் குறையாத அசுக்கோபிக்கமிலத்தைக் கொண்டிருந்தாலேயொழிய "விட்டமின் C உடன் வலுவூட்டப்பட்டது" என ஏதேனும் சுட்டுத்துண்டின்மீது விவரிக்கப்படுதலாகாது.

(ஈ) (i) சேர்க்கப்படவேண்டிய ஊட்டப்பொருள் செய்முறைப்படுத்தப்பட்ட பின்னர், செய்முறைப்படுத்துவதற்கு முன்னரான மட்டத்தில் போசணைசார் தோற்றத்தைப் பேணவேண்டியிருப்பின் அல்லது உணவுப்பொருளுக்கு சேர்க்கப்பட்ட ஊட்டப்பொருள் அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதியின் (NRVs) மூன்றில் ஒரு பங்கை (1/3) விஞ்சாதிருப்பின், பிரதான உணவு அதிகாரியின் அனுமதி தேவைப்படுத்தப்படுவதில்லை.

(ii) ஒழுங்குவிதி (ஈ)(i) எவ்வாறிருப்பினும் முப்பத்தாறு மாதங்களுக்குக் குறைந்த குழந்தைகளுக்கான உணவுப்பொருளின் வலுவூட்டுகைக்கு பிரதான உணவு அதிகாரியின் அனுமதி தேவைப்படுத்தப்படுகின்றது.

(உ) பிரதான உணவு அதிகாரியின் அங்கீகாரம், இதற்கான அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்பட்ட ஊட்டப்பொருட்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் வலுவூட்டி அல்லது கலவைக்கூறுடன் உணவுப்பொருட்களை வலுவூட்டுவதற்காகத் தேவைப்படுத்தப்படுகின்றது.

(ஊ) சுட்டுத்துண்டு ஒன்றில் அல்லது விளம்பரம் ஒன்றில் ஒரே பண்புகளைக் கொண்ட எந்த ஒத்த உணவுப்பொருட்கள் தொடர்பில் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கை ஒன்று அல்லது கூற்றொன்று உள்ளவிடத்து, அத்தகைய சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் ஒத்த எல்லா உணவுப்பொருட்களும் ஒரே பண்புகளைக் கொண்டுள்ளது என குறித்துரைப்பதில் தேவைப்படுத்தப்பட்ட மொழியிலும் ஒரே எழுத்துருக்களிலும் மூலக்கூற்றுக்கு மிக்க அண்மையிலும் குறித்துரைக்கப்பட்ட இன்னொரு உரிமைக் கோரிக்கையை அல்லது கூற்றைக் கொண்டிருப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

உ.ம். மரக்கறி எண்ணெய்யைக் கொண்டுள்ள கொள்கலன் ஒன்றின் சுட்டுத்துண்டு, எண்ணெய்யானது கொலஸ்ட்ரோல் அற்றது என உரிமைகோருவதாயின் மரக்கறி எண்ணெய்கள் கொலஸ்ட்ரோலைக் கொண்டிருப்பதில்லை என அதே மொழியிலும் எழுத்துருக்களிலும் மூலக்கூற்றுக்கு மிக்க அண்மையிலும் இன்னொரு கூற்று சுட்டுத்துண்டின்மீது செய்யப்படுதல் வேண்டும்.

(11) (அ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பாக சுட்டுத்துண்டு அல்லது விளம்பரத்தின்மீது விசேட உணவுப் பயன்பாடொன்றை உட்கிடையாகக்கூறும் கூற்றொன்று அல்லது உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய சுட்டுத்துண்டு எந்த உணவு வகைக்காக அவ்வுணவுப்பொருள் விதந்துரைக்கப்படுகின்றதோ அந்த உணவு வகையைக்கூறும் வெளிப்படுத்துகை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், அத்தகைய உணவுப்பொருள் ஒரு சக்திமூலம் என நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ குறிப்பிடுதலாகாது.

ஆயின், உணவுப்பொருள் ஒன்று சக்தி மூலம் ஒன்று எனக் குறிப்பிடும் உரிமைக்கோரிக்கை ஒன்று உள்ளவிடத்து, அத்தகைய உணவுப்பொருள் 100 கிராமுக்கு (அல்லது 100 மி.லீ) 100 kcals (425 kJ) சக்திப் பெறுமதியை அல்லது அதற்கு மேற்பட்ட சக்திப்பெறுமதியை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துதல் வேண்டும்:-

(i) 100 கிராமுக்கும் (அல்லது 100 மி.லீற்றருக்கும்) தோதானதாகவிடத்து உணவுப்பரிமாற்ற அளவொன்றிற்கு kcals இல் அல்லது kJ இல் சக்திப் பெறுமதி; அத்துடன்

(ii) ஒவ்வொரு 100 கிராமிலும் (அல்லது 100 மில்லிலீற்றரிலும்) தோதானதாகவிடத்து உணவுப் பரிமாற்ற அளவொன்றிலும் உள்ளடங்கியுள்ள மாவுச்சத்து, புரதச்சத்து மற்றும் கொழுப்புச்சத்தின் தொகை.

(12) (அ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், உணவுசார் கொழுப்புச்சத்துகள், இருதய நோய்களுக்கெதிரான பாதுகாப்பு அல்லது இருதய நோயினால் இன்னலுறும் ஆட்களுக்கு நன்மை என குறிப்பிடப்படுதலாகாது.

(ஆ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், பிரதான உணவு அதிகாரியிடமிருந்து முன்னங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலேயொழிய அத்தகைய உணவு பலவீனமானவர்களுக்கு அதனை நன்மைபயக்குகின்றதாக்குகின்ற அல்லது ஏதேனும் சுகவீனத்தை குறைக்கின்ற அல்லது தடுக்கின்ற மீளப்பலமளிக்கும் அல்லது மருந்துசார் இயல்பு அல்லது இயல்புகளைக் கொண்டுள்ளது என நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ சுட்டிக்காட்டுதலாகாது.

(இ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், அத்தகைய உணவுப்பொருள் ஏதேனும் சுகவீனத்தைக் குணமாக்கும் என நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ சுட்டிக்காட்டுதலாகாது.

(ஈ) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், பிரதான உணவு அதிகாரியிடமிருந்து முன்னங்கீகாரம் பெறப்பட்டிருந்தாலொழிய மெலிவதற்கான, எடை அதிகரிப்பதற்கான, எடைக்கட்டுப்பாட்டிற்கான அல்லது எடைகுறைப்பிற்கான வழிவகையொன்றாகவிருப்பதற்கு உரிமை கோருதல் ஆகாது.

(உ) இவ்வொழுங்குவிதியில் அனுமதிக்கப்பட்டவாறு உணவுப்பொருளின் வர்த்தக அல்லது வியாபாரப் பெயர் நீங்கலாக, உணவுப்பொருளில் உள்ள ஊட்டப்பொருட்கள், உயிரியக்க ஆக்கக்கூறுகள் அல்லது கலவைக் கூறுகள், பிரதான உணவு அதிகாரியினால் வேறுவகையாக அல்லது எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க அனுமதிக்கப்பட்டாலேயொழிய அதன் பொது அல்லது இனப் பெயரினால் தவிர சொல் (சொற்கள்), சின்னம் (சின்னங்கள்) அல்லது குறிவு அல்லது படம் ஒன்றின் மூலம் தனியாகவோ அல்லது வியாபாரக் குறியாக ஒரு தொகுதியாகவோ சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரங்களில் குறிக்கப்படுதலாகாது.

(13) உணவுப் பொருளொன்றின் தயாரிப்பில் உரிய தடைமுறைகளும் செயல்முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தாலேயொழியவும் தராதர அங்கீகாரம் பெற்ற முகவராண்மை ஒன்று அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரிடமிருந்து அப்பொருள்பட செல்லுபடியான சான்றுப்படுத்துகை ஒன்று பெறப்பட்டாலேயொழியவும் "கரிம (ஓர்கானிக்)" ஆக அதனை ஆளெவரும் சுட்டுத்துண்டிடுதல் ஆகாது.

13. (1) ஆளொருவர் பிரதான உணவு அதிகாரியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான ஏதேனும் சுகாதார உரிமைக் கோரிக்கை அல்லது ஊட்டப்பொருள் தொழிற்பாட்டு உரிமைக் கோரிக்கையை உள்ளடக்கிய ஏதேனும் விளம்பரத்தை விளம்பரப்படுத்துதல் ஆகாது. "அங்கீகாரக்கடிதத்தில்" குறிப்பிடப்பட்ட குறிப்பீட்டு இலக்கம் விளம்பரத்துடன் சேர்த்து வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 13(1)இல் குறித்துரைக்கப்பட்ட ஒரு உற்பத்திப் பொருளுக்கு மேலதிகமான உற்பத்திப்பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், ஒவ்வொரு உணவுப்பொருள் தொடர்பிலும் தனிவேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் உணவுப்பொருளை விளம்பரப்படுத்துவதற்கான ஒவ்வொரு விண்ணப்பதாரியும், இதற்கான அட்டவணை IX இன் படிவம் அ இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் மற்றும் பிரதான உணவு அதிகாரியினால் கோரப்படக்கூடியவாறான எவையேனும் மேலதிகத் தகவல்களையும் பிரதான உணவு அதிகாரிக்கு அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் ஆவணங்களுடனும் கட்புல செவிப்புலப் பொருட்கள் எவையேனும் இருப்பின் அவற்றுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்:

(i) வரைவு விளம்பரம்;

(ii) இலத்திரனியல் ஊடகத்தின் மூலமாகவிருப்பின், கதைச்சித்தரிப்பு அட்டைகளின் பிரதி ஒன்று;

(iii) பிரதான உணவு அதிகாரி குறித்த சில உணவுப்பொருளின் உரிமைக்கோரிக்கையொன்றிற்கு இயைபான ஏதேனும் அங்கீகாரத்தை முன்னர் வழங்கியிருப்பின், அத்தகைய அங்கீகாரம் பற்றிய விபரங்கள்;

(iv) வேறு ஏதேனும் இயைபான ஆவணம்; அத்துடன்

(v) கட்டளைக் கொடுப்பனவின் மூலப்பிரதி.

(5) "அங்கீகாரக் கடிதம்" ஒன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணம் இதற்கான அட்டவணை IX இன் பின்னிணைப்பு ஈ இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(6) உணவுப்பொருளொன்றை விளம்பரப்படுத்துவதற்காக "அங்கீகாரக் கடிதம்" ஒன்றிற்கான விண்ணப்பம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதன்மீது, பிரதான உணவு அதிகாரி இந்நோக்கத்திற்காக உணவு மதியுரைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உபகுழுவொன்றுக்கு அத்தகைய விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் வேண்டும். இக்குழுவின் தவிசாளர் உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகத்துக்குப் பொறுப்பான பணிப்பாளராகவிருத்தல் வேண்டும்.

(7) உபகுழுவானது, அத்தகைய விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் அதன் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் உபகுழுவினால் நாடப்படுகின்ற விடயத்தில் காலப்பகுதி ஏற்புடையதாதலாகாது.

(8) பிரதான உணவு அதிகாரி இதற்கான அட்டவணை IX இன் படிவம் ஆ இல் குறித்துரைக்கப்பட்டவாறு "அங்கீகாரக் கடிதத்தை" அளிக்கலாம்.

(9) எந்த உற்பத்திப் பொருளுக்காக அங்கீகாரம் அளிக்கப்படுகின்றதோ அந்த உற்பத்திப் பொருளின் ஊட்டப்பொருள் அமைப்பில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விளம்பரத்தின் உள்ளீடு அல்லது வடிவம் மாற்றப்பட்டிருப்பின் அல்லது அதில் விதிக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பின் "அங்கீகாரக் கடிதம்" வெற்றும் வறிதானதாகக் கருதப்படுதல் வேண்டும். பிரதான உணவு அதிகாரி, ஏதேனும் மீறுகை நிகழ்வதாயின் விளம்பரப்படுத்துகையை இடைநிறுத்துவதற்கு அங்கீகாரக்கடிதம் வைத்திருப்பவருக்கும் ஊடகத்துக்கும் அல்லது விளம்பரப்படுத்தும் முகவராண்மை அல்லது முகவர் அல்லது நிறுவனத்துக்கு அறிவிக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், இது ஏதேனும் குற்றவழக்கிற்கு தடையொன்றாகவிருத்தலாகாது.

(10) சொல்லப்பட்ட "அங்கீகாரக் கடிதம்", அது முன்னரே இல்லாதொழிந்தாலொழிய அல்லது இல்லாதாக்கப்பட்டாலொழிய மூன்று (3) ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டும்.

(11) அத்தகைய அங்கீகாரத்தின் புதுப்பித்தல் ஒன்றிற்கான விண்ணப்பமொன்று செல்லுபடிக்காலம் முடிவுறுவதற்கு ஆறு (6) மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(12) அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான ஏதேனும் விண்ணப்பம் இதற்கான அட்டவணை IX இன் படிவம் இ இல் பொருளளவில் இருத்தல் வேண்டும்.

(13) அங்கீகரிக்கப்பட்ட விளம்பரம் அல்லது உரிமைக்கோரிக்கையை மீளாய்வதற்கு புதிய விஞ்ஞானச் சான்றை அடிப்படையாகக் கொண்டு பிரதான உணவு அதிகாரிக்கு ஏதேனும் கோரிக்கை செய்யப்படின், பிரதான உணவு அதிகாரி உணவு மதியுரைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பரிசீலனை செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் உபகுழுவைப் பணிக்கலாம்.

(14) விளம்பரப்படுத்தும் முகவராண்மை, ஏதேனும் ஊடகத்தின் முகவர் அல்லது நிறுவனம் எதுவும் (அச்சு, இலத்திரனியல், வெளிக்கள) பிரதான உணவு அதிகாரியினால் வழங்கப்பட்ட 'அங்கீகாரக்கடிதம்' இன்றி உணவுப்பொருளின் சுகாதார உரிமைக்கோரிக்கைகள் அல்லது ஊட்டப்பொருள் தொழிற்பாட்டு உரிமைக் கோரிக்கைகளைக் கொண்டுள்ள ஏதேனும் விளம்பரத்தை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(15) புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணம் இதற்கான அட்டவணை IX இன் பின்னிணைப்பு ஈ இல் குறித்துரைக்கப்படுகின்றது.

(16) ஆளொருவர் குழந்தைகளுக்கான பால்மா சூத்திரம் (ஆரம்ப), குழந்தைகளுக்கான பால்மா சூத்திரம் (பின்தொடர்) குழந்தைகளுக்கான வேறு எவையேனும் உணவு உற்பத்திப்பொருட்கள் அல்லது இளம்பிள்ளைகளுக்கான பால் மற்றும் பாலை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப்பொருட்களை விளம்பரப்படுத்துதல் ஆகாது.

(17) ஆளொருவர், உணவுப்பொருள் தொடர்பாக ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கர்ப்பிணிப்பெண் ஒருவரின் அல்லது பாலூட்டும் தாயின், குழந்தை ஒன்றின் அல்லது பன்னிரெண்டு (12) வயதிற்குக்கீழான பிள்ளையின் ஏதேனும் விளம்பரம், கட்புல, செவிப்புல அல்லது படம்சார் பிரதிநிதித்துவம் ஒன்றை உற்பத்திப் பொருள் சுட்டுத்துண்டு ஒன்று, அச்சு, இலத்திரனியல் ஊடகம் சமூக ஊடகம் அல்லது வேறு ஏதேனும் வழிவகைகளில் விளம்பரப்படுத்துதலாகாது.

(18) ஆளொருவர் பிரதான உணவு அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டாலேயொழிய, விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், இலவச மாதிரிகள், உணவுப்பொருட்களுடன் இணைக்கப்பட்ட பொருட்கள் அல்லது விளையாட்டுப் பொருட்கள் என்ற வகையாக அல்லது தனிவேறாக அல்லது கார்ட்டூன் பாத்திரம், சின்னம் அல்லது பிரபலங்கள் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தைப் பயன்படுத்தி பன்னிரெண்டு (12) வயதிற்கு கீழான பிள்ளைகளுக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் உணவுப்பொருளை ஊக்குவித்தலாகாது.

14. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலேயொழிய -

"கலவைச் சேர்வை" என்பது வெவ்வேறு ஆக்கக்கூறை/கூறுகளை உருப்படியான முறையில் கலவையொன்றாக கலப்பதன் மூலம் ஆக்கப்படும் உற்பத்திப்பொருள் எனப் பொருள்படும்;

"விளம்பரம்" என்பது, சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அங்கீகரிக்கப்பட்ட விளம்பரம்" என்பது, பிரதான உணவு அதிகாரியினால் உரியமுறையில் அங்கீகரிக்கப்பட்ட விளம்பரம் எனப் பொருள்படும்;

"உயிரியக்க ஆக்கக்கூறுகள்" என்பது, இயற்கையில் நிகழ்கின்றவையும் உணவுச்சங்கிலியின் பாகமாக உள்ளவையும் மனித சுகாதாரத்தின் மீது நன்மைபயக்கும் பயனைக்கொண்டிருக்கும் என காட்டப்பட்டவையுமான அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற ஆக்கக் கூறுகள் எனப்பொருள்படும்;

"பிரதான உணவு அதிகாரி" என்பது, சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

உணவுப்பொருள் ஒன்றின் "பொதுப் பெயர்" என்பது, எந்தப் பெயரின் கீழ் உணவுப்பொருள் பொதுவாக இனங்காணப்படுகின்றதோ அந்தப் பெயராகவிருத்தல் வேண்டும்;

"உணவுசார் நார்ப்பொருள்" என்பது, மனிதனின் சிறிய குடலில் உள்ளார்ந்த நொதியங்களால் நீரேற்றப்படாத பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஒற்றைப்படியான அலகுகளுடனான மாவுச் சத்து பல்படிமங்கள் எனப்பொருள்படும் என்பதுடன் பின்வரும் பகுதிகளைச் சேர்ந்தவையுமாகும்:-

- நுகரப்பட்டவாறு உணவுப்பொருளில் இயற்கையாக நிகழும் உண்ணத்தக்க மாவுச்சத்து பல்படிமங்கள்;

- தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானம்சார் சான்றின்மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு இயற்பியல்சார், நொதித்தல்சார் அல்லது இரசாயன வழிவகைகள்மூலம் உணவுப்பொருள் மூலப்பொருளிலிருந்து பெறப்பட்டுள்ளவையும் உடல்நலத்திற்கு உடலியல்சார்

தாக்கம் அல்லது நன்மையொன்றைக் கொண்டிருப்பதாக காட்டப்பட்டுள்ளவாறான மாவுச்சத்து பல்படிமங்கள்;

- தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானம்சார் சான்றின்மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு உடல்நலத்திற்கு உடலியல்சார் தாக்கம் அல்லது நன்மையொன்றைக் கொண்டிருப்பதாக காட்டப்பட்டுள்ள செயற்கையான மாவுச்சத்து பல்படிமங்கள்.

''மாப் பண்டம்'' என்பது, தானியங்கள் மற்றும் வேறு உணவுப்பொருட்களின் கலவையொன்றைக் கொண்டு தயாரித்த அல்லது தயாரிக்காத மாவு அடை, மாவு அடைக் கேக்குகள் மற்றும் விசுக்கோத்துகள் உட்பட உற்பத்திப் பொருட்கள் எனப்பொருள்படும் என்பதுடன் பாண் மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட மாவை சேர்ப்பதன்மூலம் செய்யப்பட்ட பாண்களை தவிர்க்கிறது;

''எழுத்துரு அளவு அல்லது எழுத்து அளவு'' என்பது

(i) ஆங்கில பெரிய எழுத்துக்களின் விடயத்தில் (மேல்தட்டு எழுத்து) எழுத்துக்களின் உயரம் அல்லது

(ii) சிறிய எழுத்துக்களின் விடயத்தில் ஏறி அல்லது இறங்கி இன்றி (உ.ம். a, n, m, ග, ස, ප, ய, ட, ள ) எழுத்துக்களின் உயரம்

எனப்பொருள்படும்.

'வகுத்தமைக்கப்பட்ட கபீன் ஊட்டப்பட்ட குடிபானம்' என்பது காபனேற்றப்பட்ட குடிபானங்களுக்கான இலங்கை நியமங்கள் அளவுக்குறிப்பீட்டில் 183:2013 (மூன்றாம் மீளாய்வு) உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''வலுவூட்டி'' என்பது, உணவுப்பொருளில் ஊட்டப்பொருள் பெறுமதியை அதிகரிப்பதற்கு சேர்க்கப்பட்ட இரசாயன அல்லது இயற்கை வடிவத்திலான பதார்த்தம் ஒன்று எனப்பொருள்படும்;

''சுகாதார உரிமைக்கோரிக்கை'' என்பது, உணவுப்பொருள் ஒன்று அல்லது அவ்வுணவுப்பொருளின் ஆக்கக்கூறு ஒன்றுக்கும் உடல் நலத்திற்குமிடையில் தொடர்பொன்று உள்ளது எனக் குறிப்பிடும், முன்மொழியும் அல்லது உட்கிடையாகக் கூறும் ஏதேனும் பிரதிபலிப்பு எனப் பொருள்படும். சுகாதார உரிமைக்கோரிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(i) ஊட்டப்பொருள் செயற்பாட்டு உரிமைக்கோரிக்கைகள் - உடலின் வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் சாதாரண தொழிற்பாடுகளில் ஊட்டப்பொருளின் உடலியல்சார் பங்களிப்பை விவரிக்கும் ஒரு ஊட்டப்பொருள் உரிமைக்கோரிக்கை. உதாரணம் ''வலிமையான எலும்புகள் மற்றும் பற்களின் வளர்ச்சியில் கல்சியம் துணைப் பொருட்கள். உணவு X, கல்சியத்தின் ஒரு மூலமாகும் /உயர் கல்சியமாகும்''.

(ii) ஏனைய செயற்பாட்டு உரிமைக் கோரிக்கைகள் - இவ்வுரிமைக் கோரிக்கைகள் உடலின் சாதாரண தொழிற்பாடுகள் அல்லது உயிரியல் செயற்பாடுகளின்மீது மொத்த உணவின் சூழ்நிலையில் உணவுப் பொருட்கள் அல்லது அவற்றின் ஆக்கக் கூறுகளை நுகர்வதின் குறிப்பிட்ட நன்மைபயக்கும் பயன்களுடன் சம்பந்தப்பட்டது. அத்தகைய உரிமைக் கோரிக்கைகள், சுகாதாரத்துடனான நேர்மறையான பங்களிப்பு ஒன்றுடன் அல்லது தொழிற்பாடு ஒன்றின் சீராக்கத்துடன் அல்லது சுகாதாரத்தை மாற்றியமைத்தலுடன் அல்லது பேணிக்காத்தலுடன் தொடர்புபடுகின்றன.

உ.ம். ''பதார்த்தம் A (சுகாதாரத்துடன் இணைந்த உடலியல்சார் தொழிற்பாடொன்றை அல்லது உயிரியல் செயற்பாட்டைச் சீராக்கும் அல்லது மாற்றியமைக்கும் பதார்த்தம் A இன் பயனைப் பெயரிடுதல்). உணவு-ப்பொருள் Y பதார்த்தம் A இன் X கிராம்களைக் கொண்டுள்ளது.''

''குழந்தைகள்'' என்பது, பன்னிரெண்டு மாதங்கள் வயதுக்குக் கீழுள்ள ஆட்கள் எனப்பொருள்படும்;

''கலவைக் கூறு'' என்பது, உணவுச் சேர்மானப்பொருள் ஒன்று உட்பட. உணவுப்பொருள் ஒன்றின் உற்பத்தி அல்லது தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டு திரிபுபடுத்தப்பட்ட வடிவமொன்றில் சாத்தியமானவாறு இறுதி உற்பத்தியில் காணப்படுகின்ற ஏதேனும் பதார்த்தம் எனப் பொருள்படும்;

''சுட்டுத்துண்டிடல்'' என்பது, சட்டத்தில் வழங்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''பிரதான முகப்பு'' என்பது, சில்லறை வியாபாரத்துக்கான வெளிக்காட்டி வைத்தலின் வழக்கமுறையான நிபந்தனைகளின்கீழ் அநேகமாக வெளிக்காட்டி வைக்கப்படவேண்டிய, முன்வைக்கப்படவேண்டிய, காட்டப்படவேண்டிய அல்லது பரிசோதிக்கப்படவேண்டிய சுட்டுத்துண்டு ஒன்றின் பாகம் எனப்பொருள்படும்;

ஆயின், எவ்வாறாயினும் ''பிரதான முகப்பு'' என இருப்பதற்கு கருதப்படும் பரப்பு, பொதி அல்லது கொள்கலனின் கீழ்ப்பகுதியைத் தவிர்த்து மொத்த மேற்பரப்பின் இருபது சதவீதத்துக்குக் குறைந்ததாக இருத்தலாகாது;

''போசணைசார் உரிமைக்கோரிக்கை'' என்பது, உணவுப்பொருள் ஒன்று, சக்திப் பெறுமானம் மற்றும் புரதச்சத்து, கொழுப்புச்சத்து மற்றும் மாவுச்சத்தின் உள்ளீடு அத்துடன் விட்டமின்கள் மற்றும் கனிப்பொருட்களின் உள்ளீடு உட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்காமல், குறிப்பிட்ட போசணைசார் பண்புகளை கொண்டுள்ளது எனக் குறிப்பிடும், முன்மொழியும் அல்லது உட்கிடையாகக்கூறும் ஏதேனும் உருவமைப்பு எனப்பொருள்படும்;

பின்வருபவை போசணைசார் உரிமைக்கோரிக்கைகளை கொண்டிருத்தலாகாது:-

(அ) கலவைக்கூறுகளின் பட்டியலில் பதார்த்தங்களைக் குறிப்பிடுதல்;

(ஆ) போசணைசார் சுட்டுத்துண்டிடுதலின் கட்டாயமான பாகமொன்றாக ஊட்டப்பொருட்களைக் குறிப்பிடுதல்;

(இ) உணவுச் சட்டத்தினாலும் அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அதன் ஒழுங்குவிதிகளினாலும் தேவைப்படுத்தப்படின் சுட்டுத்துண்டின்மீது குறித்தசில ஊட்டப்பொருட்கள் அல்லது கலவைக்கூறுகளின் அலகுரீதியான அல்லது தரரீதியான வெளிப்படுத்துகை;

''ஊட்டப்பொருள்'' என்பது,

(அ) சக்தியை வழங்கும்;

(ஆ) வாழ்க்கையின் வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் பேணுகைக்குத் தேவையான; அல்லது

(இ) அதன் பற்றாக்குறை பண்புமுறையிலான, உயிர் இரசாயன அல்லது உடலியல்சார் மாற்றங்கள் ஏற்படுவதனை விளைவிக்கின்ற,

உணவுப்பொருளின் ஆக்கக்கூறு ஒன்றாக சாதாரணமாக நுகரப்பட்ட ஏதேனும் பதார்த்தம் எனப் பொருள்படும்;

''ஊட்டப்பொருள் உள்ளீட்டு உரிமைக் கோரிக்கை'' என்பது, உணவுப்பொருள் ஒன்றில் அடங்கியுள்ள ஊட்டப்பொருள் ஒன்றின் மட்டத்தை விவரிக்கும் போசணைசார் உரிமைக் கோரிக்கை ஒன்று ஆகும் (உ.ம்.: ''கல்சியத்தின் மூலம்''; 'நார்ப்பொருளில் உயர்வானது' மற்றும் 'கொழுப்புச் சத்தில் குறைவானது');

''ஊட்டப்பொருள் ஒப்பீட்டு உரிமைக் கோரிக்கை'' என்பது, இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட உணவுப் பொருட்களின் ஊட்டப்பொருள் மட்டங்கள் மற்றும் / அல்லது சக்திப் பெறுமானத்தை ஒப்பிடுகின்ற உரிமைக் கோரிக்கை ஒன்று எனப் பொருள்படும். உ.ம். ''குறைக்கப்பட்டது''; ''குறைவானது''; ''குறைந்த''; ''இலேசான''; ''அதிகரிக்கப்பட்டது''; ''மேற்பட்டது'')

''போசணை சுட்டுத்துண்டிடல்'' என்பது, உணவுப்பொருள் ஒன்றின் போசணைசார் பண்புகளை நுகர்வாளருக்கு அறிவிப்பதற்கு உட்கருதப்பட்ட விவரணம் ஒன்றாகும் என்பதுடன் பின்வரும் இரண்டு ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளது -

(அ) ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை; அத்துடன்

(ஆ) குறைநிரப்பு - ஊட்டப்பொருள் தகவல்.

''ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை'' என்பது, உணவுப் பொருள் ஒன்றின் ஊட்டப்பொருள் உள்ளீட்டின் நியமப்படுத்தப்பட்ட கூற்று ஒன்று அல்லது நிரற்படுத்துகை எனப் பொருள்படும்;

''ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதி (NRVs) என்பது, போசணை சுட்டுத்துண்டிடல் மற்றும் இயைபான உரிமைக் கோரிக்கைகளின் நோக்கங்களுக்காக விஞ்ஞானத் தரவை அடிப்படையாகக் கொண்ட எண்ம முறையான பெறுமானங்களின் தொகுதி ஒன்று எனப் பொருள்படும். அவை பின்வரும் இருவகையான ஊகுபெறுமானங்களைக் கொண்டுள்ளது;

(அ) ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் - தேவைப்பாடுகள் (NRVs-R) ஊட்டப்பொருள் தேவைப்பாடுகளுடன் இணைந்த ஊட்டப்பொருட்களின் மட்டங்களை அடிப்படையாகக் கொண்ட NRVs களைப் பார்க்கவும்;

(ஆ) ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் - தொற்றா நோய்கள் (NRVs - NCD) ஊட்டப்பொருள் குறைபாட்டு நோய்கள் அல்லது கோளாறுகளை உள்ளடக்காத உணவுடன் தொடர்பான தொற்றா நோய்களின் ஆபத்தை குறைப்பதுடன் இணைந்த ஊட்டப்பொருட்களின் மட்டங்களை அடிப்படையாகக் கொண்ட NRVs களைப் பார்க்கவும்.

''சில்லறை விற்பனைக்கான பொதிகள்'' என்பது, சில்லறை விற்பனைக்காக உட்கருதப்பட்ட பொதியொன்று அல்லது கொள்கலனொன்று எனப்பொருள்படும்; அதிலிருந்து குறிப்பிட்ட உணவுப்பொருள் ஒன்று எடுக்கப்படுதல், எண்ணப்படுதல், நிறுக்கப்படுதல் அல்லது அளவிடப்படுதல் மற்றும் வாங்குபவரின் முன்னிலையில் விற்கப்படுதல் வேண்டும். அத்துடன் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்க சுட்டுத்துண்டிடப்பட்ட முன்பொதியிடப்பட்ட சில்லறைப் பொதிகளைக் கொண்ட கொள்கலன் ஒன்றை உள்ளடக்காது;

''ஆள்'' என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும்;

''முன்பொதியிடப்பட்டது'' என்பது, பாவனையாளருக்கு முனைவதற்கு தயாரான அல்லது உணவளித்தல் நோக்கங்களுக்காக கொள்கலன் ஒன்றில் முன்கூட்டியே பொதியிடப்பட்டது அல்லது ஆயத்தப்படுத்தப்பட்டது எனப் பொருள்படும்;

''செயன்முறைப்படுத்தல் துணைப்பொருட்கள்'' என்பது, இறுதி உற்பத்திப் பொருளில் உட்கருதப்படாத ஆனால் எச்சங்கள் அல்லது வழிவந்தவைகள் தவிர்க்கமுடியாமல் காணப்படுகின்றதை விளைவிக்கக்கூடியதான பரிகரிப்பு அல்லது செய்முறைப்படுத்தலின் போது குறித்த சில தொழில்நுட்பவியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, உபகரணங்கள் அல்லது பாத்திரங்களை உள்ளடக்காததும், தானாக உணவுப்பொருள் கலவைக்கூறு ஒன்றாக நுகரப்படாததும் மூலப்பொருட்கள், உணவுப்பொருட்கள் அல்லது அவற்றின் கலவைக்கூறுகளை செய்முறைப்படுத்துவதில் வேண்டுமென்றே பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பதார்த்தம் அல்லது பொருள் எனப் பொருள்படும்;

''பல்சேர்ம நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச் சத்து அமிலம்' என்பது, சிஸ்-சிஸ் மெத்திலீன் இடையீடுசெய்யப்பட்ட இரட்டைப் பிணைப்புடனான கொழுப்புச்சத்து அமிலம் எனப்பொருள்படும்;

''சீனி'' என்பது, உணவுப்பொருளில் காணப்படும் எல்லா ஒற்றைச் சர்க்கரைகள் மற்றும் இரட்டைச் சர்க்கரைகள் எனப் பொருள்படும்;

''சீனியினால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம்'' என்பது, தன்னளவில் பூரணமாகவுள்ளதும் மேலதிக தயாரிப்பு அல்லது பதனிடுகை எதுவுமில்லாது பாவனைக்குகந்ததாகவுள்ளதும், அதன் முக்கிய சேர்மானப் பொருளாக உண்ணத்தகு கொழுப்புச்சத்து, பாற்பண்ணைப் பொருட்கள், ஜெலற்றின், உண்ணத்தகு பசைகள், கொட்டைகள் அல்லது பேணிக்காக்கப்பட்ட பழங்கள் ஆகியன சேர்க்கப்பட்டோ சேர்க்கப்படாமலோ இருக்கும் சீனி,இனிப்பூட்டும் பொருளைக் கொண்ட ஏதேனும் திடப்பொருள் அல்லது பகுதியளவிலான திடப்பொருள் எனப் பொருள்படும் என்பதுடன் இனிப்புச் சேர்க்கப்பட்ட அதிமதுரத்தையும் சுயிங்கத்தையும் உள்ளடக்கும். ஆனால் சொக்கலேற்று தின்பண்டம் மற்றும் கிறீம்கள், ஐஸ்லொலிகள், உணவு ஜெலிகள், உணவு ஜெலித் தயாரிப்புகள், ஸ்லாப் மார்சிபன், மெரிங், அல்லது மருந்தாக்கப் பொருட்கள் அல்லது சீனியை உள்ளடக்காது;

''மும்மொழிகள்'' என்பது, சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் எனப்பொருள்படும்;

"ஊடுசெல் கொழுப்புச்சத்து அமிலங்கள்" என்பது, ஊடுசெல் கட்டமைப்பில் ஆகக்குறைந்தது கார்பன் - கார்பன் இரட்டைப் பிணைப்புக்களை ஒரு மெத்திலீன் தொகுதியினால் இடையீடு செய்யப்பட்ட, ஒன்றிணையாத ஒரு மூல நிறை செறிவாக்கப்படாததும் பல்சேர்ம நிறைசெறிவாக்கப்படாததுமான கொழுப்புச்சத்து அமிலங்களின் எல்லா வடிவியல் மாற்றியங்கள் எனப்பொருள்படும்;

"மொத்த விற்பனைப்பொதி" என்பது, பின்வருவனவற்றைக் கொண்ட பொதி ஒன்று எனப் பொருள்படும்-

(அ) முதலாவதாக குறிக்கப்பட்ட சில்லறைப் பொதிகள், இடைத்தரகர் ஒருவருக்கு விற்பனைக்காக, விநியோகத்துக்காக அல்லது ஏற்புடைப்புக்காக உட்கருதப்படுகின்றவிடத்தும் நேரடியாக தனியான பாவனையாளர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு உட்கருதப்படாதவிடத்தும் அத்தகைய சில்லறைப் பொதிகளின் எண்ணிக்கை; அல்லது

(ஆ) பாவனையாளருக்கு சிறிய அளவில் உணவுப்பொருள் ஒன்றை விற்பனை செய்வதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு இடைத்தரகர் ஒருவரை இயலயச் செய்வதற்கு தொகையாக அத்தகைய இடைத்தரகருக்கு விற்கப்பட்ட அத்தகைய உணவுப் பொருள்;

"இளம் பிள்ளை" என்பது, வயதில் பன்னிரெண்டு மாதங்களுக்கும் முப்பத்தி ஆறு மாதங்களுக்குமிடையில் உள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.

*15. ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 26ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டு, 2005 சனவரி மாதம் 19 ஆந் தேதிய 1376/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.*

**அட்டவணை I**

*ஒழுங்குவிதி 4(1)(அ)*

(அ) விசுகோத்துகள்:

*சீஸ் பிட்ஸ், கிறீம் கிறக்கேர்ஸ், பிரான் கிறக்கர், குரக்கன் கிறக்கர், கிறிஸ்கோ, லெமன் பவ், மாரி, ஜின்ஜர் நட்ஸ், நைஸ், வேபர்ஸ், குகீஸ், டிஜெஸ்ரிவ் விசுக்கோத்துகள்*

(ஆ) இறைச்சித் தயாரிப்புகள்:

*பிறட்வேர்ஸ்ட், பாஸ்தா மோர்ட்டடெல்லா, போகீஸ், சலாமி, லிங்குஸ், சிப்பலோட்டாஸ், பொக்வேர்ஸ்ட், பிரான்க்பேடேர்ஸ், வைற்வேர்ஸ்ட், லன்ச்சன் மீட், பேட், மீட் லோப், மீட் போல்ஸ், சிக்கன் ரோல்*

(இ) *அம்புல்தியால்*

(ஈ) காபனூட்டப்பட்ட பானங்கள்

(உ) இனிப்புப் பண்டங்கள் : சொக்கோ

வகுத்தமைக்கப்பட்ட கபின் ஊட்டப்பட்ட குடிபானங்கள் தவிர்ந்த எல்லாக் காபனூட்டப்பட்ட குடி பானங்களும் பொதுப் பெயரைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

## அட்டவணை II

ஒழுங்குவிதி (5) (ஈ)

| நிரல் I | நிரல் II |
|---|---|
| குறைந்தபட்ச உயரம் | சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் பரப்பளவு |
| 1.5 மிமீ | 120 சதுர செமீற்றரை விஞ்சாதது |
| 3 மிமீ | 120 சதுர செமீற்றரை விஞ்சுவது |

## அட்டவணை III

ஒழுங்குவிதி 7(2)

| பொருள் | பழச்சாற்றின் உள்ளீடு |
|---|---|
| செறிவுகுறைக்கப்படாமல் பரிமாறுவதற்குத் தயாராகவுள்ள பழப்பானங்கள்/குடிபானங்கள் | 5 சதவீத எம்/எம் பழச்சாற்றுக்குக் குறையாமல் |
| * செறிவுகுறைக்கப்படாமல் பாவனைக்குத் தயாராகவுள்ள பழ இன்சுவைப்பானம் | 15 சதவீத எம்/எம் பழச்சாற்றுக்குக் குறையாமல் |
| செறிவுகுறைக்கப்படாமல் உள்ள பழ கிறஷ், கோடியல், பிழிசாறு அல்லது பாகு | 25 சதவீத எம்/எம் பழச்சாற்றுக்குக் குறையாமல் |
| செறிவுகுறைக்கப்படாமல் பழச் செறிவுகள் | 45 சதவீத எம்/எம் பழச்சாற்றுக்குக் குறையாமல் |

* தேசிக்காய்க்கும் லெமனுக்கும் 0.5 சதவீதக் குறைந்தபட்ச அமிலத்தன்மையை அடைவதற்குப் போதிய உள்ளீடு.

## அட்டவணை IV

ஒழுங்குவிதி 4(6), 12(4)

### போசணைச் சுட்டுத்துண்டிடுதல்

ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை

1. ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை

1.1 ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை பின்வருவனவற்றுக்குப் பணிப்பாணைமுறையானதாகவிருத்தல் வேண்டும்:

1.1.1 எந்த உணவுப்பொருள்களுக்காகப் போசணை அல்லது சுகாதார உரிமைக்கோரிக்கைகள் செய்யப்படுகின்றனவோ அந்த உணவுப்பொருட்கள்;

1.1.2. குழந்தைகள், இளம் பிள்ளைகள் மற்றும் கருத்தரித்துள்ள தாய்மாருக்காக விசேடமானமுறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள்;

1.1.3. விசேட உணவுசார் பாவனைகளுக்கான உணவுகளும் விசேட மருத்துவ நோக்கங்களுக்கான உணவுகளும்.

1.2 ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை வேறெல்லா உணவுகளுக்கும் தன்னிச்சையானதாகவிருத்தல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியொன்று முடிவுற்றதன் பின்னர் எல்லா உணவு உற்பத்திப்பொருட்களுக்கும் பணிப்புமுறையானதாகவிருத்தல் வேண்டும்.

2. ஊட்டப்பொருட்களை நிரற்படுத்துதல்

2.1 மேலே 1ஆம் பிரிவின்படி ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை ஏற்புடையதாக்கப்படுமிடத்து, பின்வருவனவற்றின் வெளிப்படுத்துகை பணிப்புமுறையானதாகவிருத்தல் வேண்டும்:

2.1.1 சக்திப் பெறுமானம்;

2.1.2. புரதச்சத்தின் அளவுகள், மொத்தச் சீனிகள் (இயற்கையாக ஏற்படும் மற்றும் சேர்க்கப்பட்ட சீனியுடன்), கிடைக்கக்கூடிய மாவுச்சத்து (உ.ம். உணவுசார் நார்ப்பொருள் நீங்கலாக உணவுசார் மாவுச்சத்து), உணவுசார் நார்ப்பொருள், மொத்தக் கொழுப்புச்சத்து, நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து, ஊடுசெல் கொழுப்புச்சத்துக்கள் மற்றும் சோடியம்;

2.1.3. எந்த ஊட்டப்பொருளுக்காகப் போசணைசார் உரிமைக்கோரிக்கையொன்று அத்துடன்/அல்லது சுகாதார உரிமைக்கோரிக்கை அத்துடன்/அல்லது குறிப்பீடு சுட்டுத்துண்டில் செய்யப்படுகின்றதோ அந்த வேறேதேனும் ஊட்டப்பொருளின் அளவு; அத்துடன்

2.1.4. சிறந்த போசணைசார் நிலைமையைப் பேணுவதற்கு இயைபானதெனக் கருதப்பட்ட வேறேதேனும் ஊட்டப்பொருளின் அளவு.

2.2 கொழுப்புச்சத்துசார் அமிலங்களின் அளவு அத்துடன்/அல்லது வகை அல்லது கொலஸ்ட்ரோலின் அளவு தொடர்பான உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுகின்றவிடத்து, நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்துசார் அமிலங்கள், ஒருமூல நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்துச்சார் அமிலங்கள் மற்றும் பல்சேர்மநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்துச்சார் அமிலங்கள் மற்றும் கொலஸ்ட்ரோல் என்பவற்றின் அளவுகள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பிரிவு 2.1 இன் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாகவும் பிரிவு 4.6 இற்கிணங்கவும் ஊடுசெல் கொழுப்புச்சத்துசார் அமிலத்தின் அளவும் தேவைப்படுத்தப்படுகின்றது.

2.3 2.1 மற்றும் 2.2 இன்கீழான பணிப்புமுறையான வெளிப்படுத்துகைக்கு மேலதிகமாக விட்டமின்களும் கனிப்பொருட்களும் பின்வரும் கட்டளைக்கற்களுக்கிணங்க நிரற்படுத்தப்படலாம்:

2.3.1 எந்த விட்டமின்களுக்காகவும் கனிப்பொருட்களுக்காகவும் விதந்துரைக்கப்பட்ட உட்கொள்ளுதல்கள் நிலைநாட்டப்பட்டுள்ளனவோ அந்த விட்டமின்களும் கனிப்பொருட்களும் மட்டுமே வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

2.3.2. ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகை ஏற்புடையதாக்கப்படும்போது, சுட்டுத்துண்டில் அளவிடப்பட்டவாறு 100 கிராமிற்கு அல்லது 100 மி. லீற்றருக்கு அல்லது ஓர் உணவுப்பரிமாற்றத்திற்கு ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதியின் 5 சதவீதத்துக்குக் குறைவான அளவுகளில் காணப்படும் விட்டமின்களும் கனிப்பொருட்களும் வெளிப்படுத்தப்படுதல் ஆகாது.

3. ஊட்டப்பொருட்களைக் கணக்கிடுதல்

3.1 சக்தியைக் கணக்கிடுதல்

நிரற்படுத்தப்படவேண்டிய சக்தியின் அளவு பின்வரும் மாற்றற் காரணிகளைப் பயன்படுத்துவதன்மூலம் கணக்கிடப்படுதல் வேண்டும்:

| | |
|---|---|
| மாவுச்சத்துக்கள் | 4 kcal/g அல்லது 17 kJ/g |
| புரதச்சத்து | 4 kcal/g அல்லது 17 kJ/g |

| | |
|---|---|
| கொழுப்பு | 9 kcal/g அல்லது 37 kJ/g |
| கரிம அமிலம் | 3 kcal/g அல்லது 13 kJ/g |

3.2 புரதச்சத்தைக் கணக்கிடுதல்

நிரற்படுத்துப்படவேண்டிய புரதச்சத்தின் அளவு, பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்திக் கணக்கிடப்படுதல் வேண்டும்:

புரதச்சத்து = மொத்த Kjeldahl நைதரசன் x மாற்றற்-காரணி

அவ்வுணவுக்கான பகுப்பாய்வு முறையில் வித்தியாசமான ஒரு காரணி கொடுக்கப்பட்டிருந்தாலேயொழிய மாற்றற் காரணி 6.25 ஆகவுள்ளது.

4. ஊட்டப்பொருள் உள்ளீட்டை முன்வைத்தல்

4.1 ஊட்டப்பொருள் உள்ளீட்டின் வெளிப்படுத்துகை எண்முறையானதாகவிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மேலதிக முன்வைத்தல் வழிவகைகளைப் பயன்படுத்துதல் தவிர்க்கப்படுவதில்லை.

4.2 சக்திப்பெறுமானம் பற்றிய தகவல், 100 கிராமுக்கு அல்லது 100 மில்லிலீற்றருக்கு அல்லது பொதியானது தனியொரு பாகத்தை மட்டுமே கொண்டிருப்பின் அப்பொதிக்கு kcal அத்துடன்/அல்லது kJ இல் கூறப்படுதல் வேண்டும். மேலதிகமாக, இத்தகவல், சுட்டுத்துண்டின்மீது அளவிடப்பட்டவாறு ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு அல்லது ஒரு பாகத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், பொதியில் அடங்கியுள்ள பாகங்களின் எண்ணிக்கை கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

4.3 உணவிலுள்ள புரதச்சத்து, மாவுச்சத்து மற்றும் கொழுப்புச்சத்தின் அளவுகள் பற்றிய தகவல், 100 கிராமுக்கு அத்துடன்/அல்லது 100 மில்லிலீற்றருக்கு அல்லது பொதியானது தனியொரு பாகத்தை மட்டுமே கொண்டிருப்பின் அப்பொதிக்கு கிராமில் கூறப்படுதல் வேண்டும். மேலதிகமாக, இத்தகவல், சுட்டுத்துண்டின்மீது அளவிடப்பட்டவாறு ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு அல்லது ஒரு பாகத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், பொதியில் அடங்கியுள்ள பாகங்களின் எண்ணிக்கை கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

4.4 விட்டமின்கள் மற்றும் கனிப்பொருட்கள் பற்றிய எண்முறையான தகவல், மெற்றிக் கூறுகளில் அத்துடன்/அல்லது 100 கிராமுக்கு அல்லது 100 மில்லிலீற்றருக்கு அல்லது பொதியானது தனியொரு பாகத்தை மட்டுமே கொண்டிருப்பின் அப்பொதியொன்றுக்கு ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதியின் நூற்றுவீதமாகக் கூறப்படுதல் வேண்டும். மேலதிகமாக, இத்தகவல், சுட்டுத்துண்டின்மீது அளவிடப்பட்டவாறு ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு அல்லது ஒரு பாகத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், பொதியில் அடங்கியுள்ள பாகங்களின் எண்ணிக்கை கூறப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமாக, புரதச்சத்து மற்றும் மேலதிக ஊட்டப்பொருட்கள் பற்றிய தகவல், ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமானமொன்று நிலைநாட்டப்பட்டிருக்குமிடத்து ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமானத்தின் நூற்றுவீதங்களாகவும் கூறப்படலாம்.

இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை V இல் கொடுக்கப்பட்ட ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள், 36 மாதங்களுக்கு மேற்பட்ட தனியாட்களாக இனங்காணப்பட்ட பொதுச் சனத்தொகைக்கானவையாகும். ஒட்டுமொத்த உடனலத்துக்கொத்த உணவுசார் உட்கொள்ளுதலுக்குப் பங்களிக்கும் விருப்புத்தெரிவுகளைப் பாவனையாளர்கள் செய்வதற்கு உதவுவதற்கு அவை சுட்டுத்துண்டிடும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

4.5 கிடைக்கக்கூடிய மாவுச்சத்துக்கள் காணப்படுகின்றமை (உணவுசார் நார்ப்பொருள் புறநீங்கலாக மாவுச்சத்துக்கள்) ''மாவுச்சத்துக்களாகச்'' சுட்டுத்துண்டின்மீது வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். மாவுச்சத்தின் வகை வெளிப்படுத்தப்படுமிடத்து, இந்த வெளிப்படுத்துகை பின்வரும் வடிவத்தில் மொத்த மாவுச்சத்து உள்ளீட்டின் வெளிப்படுத்துகையை உடனடுத்து வருதல் வேண்டும்:

"மாவுச்சத்து ......... கிராம், இதில் சீனிகள் ......கிராம்."

இதனையடுத்து பின்வருவது இடப்படலாம்: "x" ..... கிராம் "x" என்பது வேறேதேனும் மாவுச்சத்து ஆக்கக்கூறின் குறித்த பெயரைக் குறிக்கின்றவிடத்து.

4.6 கொழுப்புச்சத்து அமிலங்களின் அளவு அத்துடன்/அல்லது வகை அல்லது கொலஸ்ட்ரோலின் அளவு வெளிப்படுத்தப்படுமிடத்து, இவ்வெளிப்படுத்துகை, 4.3ஆம் பிரிவுக்கு இணங்க மொத்தக் கொழுப்புச்சத்தின் வெளிப்படுத்துகையை அடுத்துவருதல் வேண்டும்.

பின்வரும் வடிவம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

| | |
|---|---|
| மொத்தக் கொழுப்புச்சத்து | .... கிராம் |
| இதில் நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்கள் | .... கிராம் |
| ஊடுசெல் கொழுப்புச்சத்து அமிலங்கள் | ....கிராம் |
| ஒருமூலநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து அமிலங்கள் | ....கிராம் |
| பல்சேர்மநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து அமிலங்கள் | .... கிராம் |
| கொலஸ்ட்ரோல் | .... மில்லி கிராம் |

5. பொறுத்தற் திறனும் இணங்கியொழுகுகையும்

5.1 பொறுத்தற்திறன் எல்லைகள் தயாரிப்பிலுள்ள பொதுச் சுகாதார அக்கறைகள், பயனுகர்காலம், பகுப்பாய்வின் செம்மை, பதனிடுதல் வேறுபாட்டுத்தன்மை மற்றும் உள்ளார்ந்த பொறுப்பு அத்துடன் ஊட்டப்பொருளின் வேறுபாட்டுத்தன்மை என்பன தொடர்பாகவும், ஊட்டப்பொருள் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளதா அல்லது இயற்கையாகவே ஏற்படுகின்றதா என்பதற்கிணங்கவும் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

5.2 ஊட்டப்பொருள் வெளிப்படுத்துகையில் பயன்படுத்தப்பட்ட பெறுமானங்கள், சுட்டுத்துண்டிடப்படுகின்ற தயாரிப்பைக் குறிக்கின்ற தயாரிப்புகளின் பகுப்பாய்வுகளிலிருந்து குறிப்பாகப் பெறப்பட்ட தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எடையிடப்பட்ட சராசரிப் பெறுமானங்களாகவிருத்தல் வேண்டும்.

6. தயாரிப்புச் சுட்டுத்துண்டின் மீது காணப்படுவதற்கான அடிப்படை போசணைசார் முகப்பிற்கான வடிவம்

| வழக்காமான பெறுமானங்கள் | 100 கிராமிற்கு (திண்மப்பொருட்களின் விடயத்தில்)<br>100 மில்லிலீற்றருக்கு (திரவப்பொருட்களின் விடயத்தில்) | உணவுப் பரிமாற்றமொன்றிற்கு |
|---|---|---|
| சக்தி | kJ | kJ |
| | kcal | kcal |
| மொத்த மாவுச்சத்து | g | g |
| உணவு சார் நார்ப்பொருள் | g | g |
| மொத்த சீனி | g | g |
| இயற்கையாக காணப்படும் சீனி | g | g |
| சேர்க்கப்பட்ட சீனி | g | g |
| புரதச் சத்து | g | g |
| மொத்த கொழுப்புச் சத்து | g | g |
| நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச் சத்து அமிலங்கள் | g | g |
| ஒரு மூல நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச் சத்து அமிலங்கள் | g | g |
| பல்சேர்ம நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச் சத்து அமிலங்கள் | g | g |
| ஊடுசெல் கொழுப்புச் சத்து அமிலங்கள் | g | g |
| கொலஸ்ட்ரோல் | mg | mg |
| சோடியம் (Na) | mg | mg |

பரிமாறல் அளவு.............கிராம் அல்லது மில்லி லீற்றர்

பொதியொன்றிற்கு பரிமாறல்களின் எண்ணிக்கை.............

## அட்டவணை V

*ஒழுங்குவிதி 12(5)(அ),*
*12(6) (ஆ) (இ), 12(10) (ஈ)*

ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் (ஊகுபெ) இரு வகைகளாகும்:

ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் - தேவைப்பாடுகள் (ஊகுபெறுமானங்கள் - ஆர்) அத்துடன்

ஊட்டப்பொருள் குறிப்பீட்டுப் பெறுமதிகள் - தொற்றாத நோய் (ஊகுபெறுமானங்கள் - தொநோ)

நாளொன்றிற்கான ஊகுபெறுமானங்கள் - ஆர்

| | |
|---|---|
| புரதச்சத்து (g) | 50 |
| விட்டமின் A (µg)* | 800 |
| விட்டமின் D (µg) | 5 |
| விட்டமின் C (mg) | 100 |
| தியமின் (mg) | 1.2 |
| ரைபோபிலேவின் (mg) | 1.2 |
| நயசின் (mg)** | 15 |
| விட்டமின் B6 (mg) | 1.3 |
| போலேற்று (µg) *** | 400 |
| விட்டமின் B12 (µg) | 2.4 |
| பயோட்டின் (µg) | 30 |
| பன்ட்டதொனேற்று (mg) | 5 |
| விட்டமின் K (µg) | 60 |
| விட்டமின் E (mg) | 9 |
| கல்சியம் (mg) | 1000 |
| மக்னீசியம் (mg) | 310 |
| இரும்புச்சத்து (mg) | 22 |
| துத்தநாகம் (mg) | 15 |
| அயடின் (µg) | 150 |
| செம்பு (µg) | 900 |
| செலீனியம் (µg) | 60 |
| பொட்டாசியம் (mg) | 3500 |
| சோடியம் (mg) | 2000 |
| குளோரைற்று (mg) | 3400 |
| பொஸ்பரஸ் (mg) | 700 |
| மங்கனீஸ் (mg) | 3 |
| புளோரைற்று (mg) | 3.5 |
| குரோமியம் (µg) | 120 |
| மொலிப்தினம் (µg) | 45 |
| உணவுசார் நார்ப்பொருள் (g) | 30 |

நயசின், போலேட் மற்றும் விட்டமின் A என்பவற்றுக்குச் சமமானவற்றுக்கான மாற்றற் காரணிகள்:

| விட்டமின் | விட்டமினுக்குச் சமமானவை | உணவுசார்ந்தவற்றுக்குச் சமமானவை |
|---|---|---|
| நயசின் | 1 மிகி நயசினுக்குச் சமமானவை (NE) = | 1 மிகி நயசின்<br>60 மிகி ட்ரிப்டோபன் |
| போலேற்று | 1 µg உணவுசார் போலேற்றுக்குச் சமமானவை (DFE) = | 1 µg உணவு போலேற்று உணவுடன் சேர்க்கப்பட்ட அல்லது உணவுடன் உட்கொள்ளப்பட்ட குறைநிரப்பியாக 0.6 µg போலிக் அமிலம்<br>வெறும் வயிற்றில் உட்கொள்ளப்பட்ட குறைநிரப்பியாக 0.5µg போலிக் அமிலம் |
| விட்டமின் A | 1 µg ரெட்டினோல் செயற்பாட்டுக்குச் சமமானவை (RAE) = | 1 µg ரெட்டினோல்<br>12 µg B- கரோட்டீன்<br>24 µg வேறு முன்னுயிர்ச்சத்து A கரோட்டி-நொய்ட்கள் |
| | அல்லது<br>1 µg ரெட்டினோலுக்குச் சமமானவை (RE) = | 1 µg ரெட்டினோல்<br>6 µg ß- கரோட்டீன்<br>12 µg வேறு முன்னுயிர்ச்சத்து A கரோட்டி-நொய்ட்கள் |

ஊகுபெறுமானங்கள் - தொநோ (NRVs - NCD)

| | |
|---|---|
| நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்கள் | 20கி |
| சோடியம் | 2000 மிகி |

* RAE அல்லது RE – ரெட்டினோல் செயற்பாட்டுக்குச் சமமானவை அல்லது ரெட்டினோலுக்குச் சமமானவை
** NE – நயசினுக்குச் சமமானவை
*** DFE – உணவுசார் போலேற்றுக்குச் சமமானவை

## அட்டவணை VI

ஒழுங்குவிதி 12 (5) (ஆ) மற்றும் (இ)

போசணை மற்றும் சுகாதார உரிமைக்கோரிக்கைகளின் பயன்பாடு பற்றிய விளக்கமுறையான குறிப்பு

**1. ஊட்டப்பொருள் ஒப்பீட்டு உரிமைக்கோரிக்கைகள்**

சுட்டுத்துண்டின்மீதுள்ள பயன்பாட்டுக்கான அறிவுறுத்துதல்களுக்கிணங்க பாவனைக்காகத் தேவைப்பட்ட மேலதிகத் தயாரிப்பைக் கணக்குக்கெடுத்து, பின்வரும் நிபந்தனைகளுக்கமையவும் விற்பனை செய்யப்பட்டவாறான உணவின் அடிப்படையிலும் ஒப்பீட்டு உரிமைக்கோரிக்கைகள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்:

ஒப்பிடப்படும் உணவுகள் அதே உணவின் அல்லது ஒத்த உணவுகளின் வித்தியாசமான வகைகளாகவிருத்தல் வேண்டும். ஒப்பிடப்படும் உணவுகள் தெளிவாக இனங்காணப்படுதல் வேண்டும்.

சக்திப் பெறுமானத்தில் அல்லது ஊட்டப்பொருள் உள்ளீட்டில் ஆன வித்தியாசத்தின் அளவு பற்றிய கூற்று அளிக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பீட்டு உரிமைக்கோரிக்கைக்கு கிட்டிய அண்மையில் பின்வரும் தகவல்கள் காணப்படுதல் வேண்டும்:-

அ) ஒரு நூற்றுவீதமாக, பின்னமாக அல்லது முழுத்தொகையாகக் கூறப்பட்ட, அதே அளவு தொடர்பான வித்தியாசத்தின் தொகை. ஒப்பீட்டின் முழுவிபரங்களும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆ) உணவானது எந்த உணவுடன் (களுடன்) ஒப்பிடப்படுகின்றதோ அந்த உணவின் (வுகளின்) அடையாளம். உணவு(கள்) பாவனையாளர்களினால் உடனடியாக இனங்காணப்படமுடியுமான அத்தகையவொரு முறையில் அது (அவை) விபரிக்கப்படுதல் வேண்டும்.

சக்தி அல்லது பெரும் ஊட்டப்பொருட்கள் மற்றும் சோடியம் பற்றிய ஒப்பீட்டளவிலான உரிமைக்கோரிக்கைகளுக்காக, ஒப்பீடானது, ஒப்பிடப்பட்ட உணவுகளுக்கும் அட்டவணை VII இல் 'குறைவு" அல்லது ஒரு "மூலமாக" வரைவிலக்கணங்கூறப்பட்ட எண்ணுக்குச் சமமான சக்திப் பெறுமானத்தில் அல்லது ஊட்டப்பொருள் உள்ளீட்டில் உள்ள குறைந்தபட்ச முழுமையான வித்தியாசத்துக்கும் இடையே முறையே சக்திப் பெறுமானத்தில் அல்லது ஊட்டப்பொருள் உள்ளீட்டில் ஆகக்குறைந்தது 30% ஒப்பீட்டளவிலான வித்தியாசத்தின் அடிப்படையிலிருத்தல் வேண்டும். சோடியம் தவிர்ந்த நுண்ஊட்டப்பொருட்கள் பற்றிய ஒப்பீட்டளவிலான உரிமைக்கோரிக்கைகளுக்காக, ஒப்பீடானது, ஒப்பிடப்பட்ட உணவுகளுக்கிடையே ஊகுபெறுமானத்தின் (NRV) ஆகக்குறைந்தது 10% வித்தியாசத்தின் அடிப்படையிலிருத்தல் வேண்டும்.

2. சுகாதார உரிமைக்கோரிக்கைகள்

போசணை மற்றும் சுகாதார உரிமைக்கோரிக்கைகளின் மதிப்பீட்டுக்காக, ஒன்றில் மதிப்புப்பெற்ற உயர்தொழிற்சார் குழுக்களினால் ஒப்பானமுறையில் மீளாயப்பட்ட அல்லது ஒப்பானமுறையில் மீளாயப்பட்ட விஞ்ஞானச் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். மேலேயுள்ள கட்டளைக்கற்களைத் திருப்திப்படுத்தாத கம்பெனி அடிப்படையிலான ஆராய்ச்சி விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

சுகாதார உரிமைக்கோரிக்கைகள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், பின்வரும் எல்லா நிபந்தனைகளும் எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்.

சுகாதார உரிமைக்கோரிக்கை இரு பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) ஊட்டப்பொருளின் உடல்சார் பங்களிப்பின்மீதான அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவு - சுகாதாரத் தொடர்புமுறைமீதான தகவல்:

(ii) தொடர்புமுறையானது ஒரு முழுமையான உணவின் அல்லது உணவுகளின் அடிப்படையிலிருந்தாலொழிய, ஊட்டப்பொருளின் உடல்சார் பங்களிப்புக்கு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவு-சுகாதாரத் தொடர்புமுறைக்கு இயைபான தயாரிப்பின் ஆக்கம் பற்றிய தகவல். இதன் மூலம் ஆராய்ச்சியானது உணவின் குறித்த ஆக்கக்கூறுகளுடன் இணைந்திருப்பதில்லை.

## அட்டவணை VII

ஒழுங்குவிதி 12(5)
(ஆ) மற்றும் (இ)

**ஊட்டப்பொருள் உள்ளீடுகளுக்கான நிபந்தனைகள்**

| ஆக்கக்கூறு | உரிமைக் கோரிக்கை | நிபந்தனைகள் |
|---|---|---|
| சக்தி | குறைவு | 100 கிராமுக்கு 40 kcal (170 kJ) க்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மிலீற்றருக்கு 20 kcal (80 kJ) க்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | அற்றது | 100 மிலீற்றருக்கு 4 kcal க்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | குறைக்கப்பட்டது* | உணவின் மொத்தச் சக்திப்பெறுமானத்தைக் குறைக்கின்ற அதன் பண்பு(கள்) பற்றிய சுட்டியுடன், சக்திப் பெறுமானம் குறைந்தபட்சம் 30 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது |

| ஆக்கக்கூறு | உரிமைக் கோரிக்கை | நிபந்தனைகள் |
|---|---|---|
| கொழுப்புச்சத்து | குறைவு | 100 கிராமுக்கு 3 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்) **<br>100 மி. லீற்றருக்கு 1.5 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | அற்றது | 100 கிராமுக்கு (திண்மங்கள்) அல்லது 100 மிலீற்றருக்கு (திரவங்கள்)***0.5 கிராமுக்கு மேற்படாமல் |
| நிறை செறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து**** | குறைவு | 100 கிராமுக்கு 1.5 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 0.75 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | அற்றது | 100 கிராமுக்கு 0.1 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 0.1 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | குறைக்கப்பட்டது | நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்களினதும் ஊடுசெல் கொழுப்புச்சத்து அமிலங்களினதும் தொகை, ஒத்த தயாரிப்பொன்றிலான நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்களினதும் ஊடுசெல் கொழுப்புச்சத்து அமிலங்களினதும் தொகையைவிடக் குறைந்தபட்சம் 30 சதவீதத்துக்குக் குறைவாகவிருத்தலும் ஊடுசெல் கொழுப்புச்சத்து அமில உள்ளீடு ஒத்த தயாரிப்பொன்றிலானதற்குச் சமமாக அல்லது அதற்குக் குறைவாகவிருத்தலும் |
| கொலஸ்ட்ரோல் **** | குறைவு | 100 கிராமுக்கு 0.02 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 0.01 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | அற்றது | 100 கிராமுக்கு 0.005 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 0.005 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| சீனிகள் | குறைவு | 100 கிராமுக்கு 5 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 2.5 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | அற்றது | 100 கிராமுக்கு 0.5 கிராமுக்கு மேற்படாமல் (திண்மங்கள்)<br>100 மி. லீற்றருக்கு 0.5 கிராமுக்கு மேற்படாமல் (திரவங்கள்) |
| | சீனி சேர்க்கப்பட வில்லை | சேர்க்கப்பட்ட ஏதேனும் மொனோ அல்லது டயோ சக்கரைட்ஸை அல்லது இனிப்பூட்டும் தன்மைகளுக்காக வேறேதேனும் உணவைக் கொண்டிருத்தலாகாது. சீனிகள் உணவில் இயற்கையாகக் காணப்பட்டால், சுட்டுத்துண்டில் "இயற்கையாக உள்ள சீனிகள் காணப்படுகின்றன" எனக் கூறவும். |
| சோடியம் | குறைவு | 100 கிராமுக்கு அல்லது 100 மி. லீற்றருக்கு 0.12 கிராமுக்கு மேற்படாமல் |
| | மிகக்குறைவு | 100 கிராமுக்கு அல்லது 100 மி. லீற்றருக்கு 0.04 கிராமுக்கு மேற்படாமல் |

| ஆக்கக்கூறு | உரிமைக் கோரிக்கை | நிபந்தனைகள் |
|---|---|---|
| | அற்றது | 100 கிராமுக்கு 0.005 கிராமுக்கு மேற்படாமல் |
| புரதச்சத்து | மூலம் | 100 கிராமுக்கு ஊகுபெறுமானத்தின் குறைந்தபட்சம் 10% (திண்மங்கள்)<br>100 மிலீற்றருக்கு ஊகுபெறுமானத்தின் குறைந்தபட்சம்<br>5% (திரவங்கள்) அல்லது 100 kcal க்கு குறைந்தபட்சம் ஊகுபெறுமானத்தின் 5% அல்லது ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு ஊகுபெறுமானத்தின் 10% |
| | அதிகம் | 'மூலத்துக்கான' பெறுமதியின் 2 மடங்குகள் |
| விட்டமின்களும் கனிப்பொருட்களும் | மூலம் | 100 கிராமுக்கு ஊகுபெறுமானத்தின் குறைந்தபட்சம்<br>15% (திண்மங்கள்)<br>100 மிலீற்றருக்கு ஊகுபெறுமானத்தின் குறைந்தபட்சம்<br>7.5% (திரவங்கள்) அல்லது<br>100 kcal க்கு குறைந்தபட்சம் ஊகுபெறுமானத்தின் 5% அல்லது ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு ஊகுபெறுமானத்தின் 15% |
| | அதிகம் | 'மூலத்துக்கான' பெறுமதியின் 2 மடங்குகள் |
| உணவுசார் நார்ப்பொருள் | மூலம் | ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு 100 கிராமுக்கு குறைந்தபட்சம் 3 கிராம் அல்லது 100 kcal க்கு 1.5 கிராம் அல்லது ஊகுபெறுமானத்தின் 10% |
| | அதிகம் | ஓர் உணவுப்பரிமாற்றத்துக்கு 100 கிராமுக்கு குறைந்தபட்சம் 6 கிராம் அல்லது 100 kcal க்கு 3 கிராம் அல்லது ஊகுபெறுமானத்தின் 20% |
| ஒமெகா-3 கொழுப்புச்சத்து அமிலங்கள் | மூலம் | 100 கிராமுக்கும் 100 kcal க்கும் குறைந்தபட்சம் 0.3 கிராம் அல்பாலினொலெனிக் அமிலம் அல்லது 100 கிராமுக்கும் 100 kcal க்கும் ஐகோசபென்டேனொயிக் அமிலம் (EPA) மற்றும் டொகோசஹேசேநொயிக் அமிலத் தொகையின் (DHA) குறைந்தபட்சம் 40 மிலிகிராம் |
| | அதிகம்/ கூடுதலானது | "மூலத்துக்காக" பெறுமானத்தின் 2 மடங்குகள் |
| ஒருமூலநிறை செறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து | அதிகம் | ஒருமூலநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து, தயாரிப்பின் சக்தியின் 20 சதவீதத்துக்கு மேற்பட்டதை வழங்குகின்றதென்ற நிபந்தனையின்கீழ் ஒருமூலநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்திலிருந்து பெறப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்களின் குறைந்தபட்சம் 45% |

| ஆக்கக்கூறு | உரிமைக் கோரிக்கை | நிபந்தனைகள் |
|---|---|---|
| பல்சேர்ம நிறை செறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து | அதிகம் | பல்சேர்மநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து, தயாரிப்பின் சக்தியின் 20 சதவீதத்துக்கு மேற்பட்டதை வழங்குகின்றதென்ற நிபந்தனையின்கீழ் பல்சேர்மநிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்திலிருந்து பெறப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்களின் குறைந்தபட்சம் 45% |
| நிறை செறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து | அதிகம் | நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்து, தயாரிப்பின் சக்தியின் 20 சதவீதத்துக்கு மேற்பட்டதை வழங்குகின்றதென்ற நிபந்தனையின்கீழ் நிறைசெறிவாக்கப்படாத கொழுப்புச்சத்திலிருந்து பெறப்பட்ட கொழுப்புச்சத்து அமிலங்களின் குறைந்தபட்சம் 70% |

* ஒப்பிடப்படத்தக்க தயாரிப்புள்ளபோது மட்டுமே "குறைக்கப்பட்ட சக்தி" உரிமைக்கோரிக்கை

** கொழுப்பகற்றப்பட்ட பால்மா விலக்களிக்கப்பட்டுள்ளது

*** இவ்வாசகம் நீர்கலந்த தென்னைத் தயாரிப்புகளுக்கு ஏற்புடையதாகாது.

**** நிறைசெறிவாக்கப்பட்ட கொழுப்புச்சத்து மற்றும் கொலஸ்ட்ரோலுக்கான உரிமைக்கோரிக்கைகளின் விடயத்தில், ஏற்புடையதானவிடத்து ஊடுசெல் கொழுப்புச்சத்து அமிலங்கள் கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை VIII

ஒழுங்குவிதி 12(10)
(ஆ) மற்றும் (உ)

உணவுகளுடன் சேர்க்கப்படக்கூடிய அனுமதிக்கப்பட்ட விட்டமின்கள், கனிப்பொருட்கள், அமினோ அமிலங்கள், கொழுப்புச்சத்து அமிலங்கள், நியூக்லியோடைட்டுகள் என்பனவற்றின் நிரல்

| விட்டமின்கள் | கனிப்பொருட்கள் |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் |
| முன்னுயிர்ச்சத்து A | பொஸ்பரஸ் |
| விட்டமின் D ($D_2$ மற்றும் $D_3$) | மக்னீசியம் |
| விட்டமின் E | இரும்பு |
| விட்டமின் K1 | செம்பு |
| விட்டமின் B1 | அயடின் |
| விட்டமின் B2 | துத்தநாகம் |
| நயசின் | மங்கனீஸ் |
| பன்டோதெனிக் அமிலம் | சோடியம் |
| விட்டமின் B6 | பொட்டாசியம் |
| போலிக் அமிலம் | செலீனியம் |
| விட்டமின் B 12 | குரோமியம் |
| பயோட்டின் | மொலிப்தினம் |
| விட்டமின் C | புளோரைட் |
| கோலைன் | குளோரைட் |
| இனோசிடோல் | |

அமினோ அமிலங்கள்
ஐசோலியூசின்
லியூசின்
லைசின்
மெதியோனைன்
பீனைல் அலனின்
திரியோனைன்
ட்ரிப்டோபன்
வலைன்
ஹிஸ்டிடைன்
ஆர்ஜினைன்
டைரோசின்
சிஸ்டின்
சிஸ்ட்டீன்
அலனைன்
அஸ்பாடிக் அமிலம்
சிற்றுலைன்
க்லூடமிக் அமிலம்
க்லூடமின்
க்லைசின்
ஓனிதின்
புரோலின்
செரீன்
கானிடீன்
டோரீன்

**கொழுப்புச்சத்து அமிலங்கள்**
லினோலிக் அமிலம்
அல்பா-லினோலெனிக் அமிலம்
அரச்சிடொனிக் அமிலம்
டொகோசஹேசநோயிக் அமிலம் (DHA)
ஐகோசபென்டேனொயிக் அமிலம் (EPA)

**நியூக்லியோடைட்ஸ்**
அடினோசின் 5' மொனோபொஸ்பேட் (AMP)
சைடிடைன் 5' மொனோபொஸ்பேட் (CMP)
குவானொசின் 5' மொனோபொஸ்பேட் (GMP)
யுரிடீன் 5' மொனோபொஸ்பேட் (UMP)
இனோசின் 5' மொனோபொஸ்பேட் (IMP)

**அட்டவணை IX**

ஒழுங்குவிதி 13

**படிவம் அ**

உணவுத்தயாரிப்பொன்றின் சுகாதார உரிமைக்கோரிக்கைகள் அடங்கிய விளம்பரம் ஒன்றிற்கான விண்ணப்பம்

- உணவுத்தயாரிப்பின் பொதுப்பெயர்:.......................................................................
- உணவுத்தயாரிப்பின் வணிக/வியாபாரப் பெயர்:....................................................

1. விண்ணப்பதாரர்* (உற்பத்தியாளர்/பொதியிடுநர்/விநியோகிப்பாளர்/இறக்குமதியாளர்):

கம்பனியின் பெயர்

விண்ணப்பதாரரின் பெயர்

விண்ணப்பதாரரின் தே.அ.அ.இல.

முகவரி:

தொலைபேசி இல:

கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல்:

2. விளம்பரப்படுத்தல் முகவராண்மை அல்லது முகவராண்மைகள்: (ஒரு முகவராண்மைக்கு மேற்படின் தனிவேறான பட்டியலை இணைக்கவும்)

முகவராண்மையின் பெயர்:

தொடர்புகொள்ளவேண்டிய ஆளின் பெயர்:

தொடர்பு கொள்ள வேண்டிய ஆளின் தே.அ.அ.இல.

முகவரி:

தொலைபேசி இல: கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல்:

3. அங்கீகாரம் கோரப்படுகின்ற விளம்பரத்தில் உள்ளடக்கப்படும் உரிமைக்கோரிக்கைகள்:

I.
II.
III.
IV.

4. உணவுத் தயாரிப்பு உற்பத்தியாளர் (இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைக்காக மட்டும்):
பெயர் :

முகவரி :

தொலைபேசி இல : கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல் :

5. மூலநாடு (இறக்குமதிசெய்யப்பட்ட தயாரிப்புகளுக்காக மட்டும்):

6. விளம்பரமுறை:

| | முறை | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| I | காணொளி | | |
| II | வட்டு ஒலித்தொகுப்பாளர் (DJ) உட்பட கேட்பொலி | | |
| III | நிலைப்படம்/காட்சி வில்லை/அச்சு | | |

7. விளம்பரம் காட்சிப்படுத்தப்படும் ஊடகங்களின் பெயர்கள்:

| I | ஊடகங்கள் | பெயர்/பெயர்கள் |
|---|---|---|
| II | | |
| III | | |
| IV | | |
| | | |
| V | வேறு ஏதேனும் | விளம்பரப் பலகைகள், விளம்பரச் சட்டப்பலகைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், சிற்றேடுகள், வேறு ஏதேனும் (குறித்துரைக்கவும்) ................. |

8. விளம்பரப்படுத்தும் மொழிகள் (குறியிடவும்)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

9. தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் வேறு விடயங்கள்

| | ஆவணங்கள் மற்றும் வேறு விடயங்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | கதைச்சித்தரிப்பு அட்டைகளின் ஆறு (6) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | | |
| 2 | கட்புல செவிப்புலங்களின் ஆறு (6) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் (ஏற்புடையதாயின்) | | |
| 3 | வானொளி ஒலிபரப்புக்கான எழுத்துக்களின் (script) ஆறு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் (ஏற்புடையதாயின்) | | |
| 4 | அச்சு ஊடகத்துக்கான வரைவு விளம்பரத்தின் ஆறு (6) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் (ஏற்புடையதாயின்) | | |
| 5 | ஒப்பானமுறையில் மீளாயப்பட்ட தொழில்நுட்ப/ஆராய்ச்சி ஆவணங்கள் எவையேனும் இருப்பின் அவற்றின் ஆறு (6) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | | |
| 6 | சுட்டுத்துண்டில் குறிப்பிட்டவாறு கலவைக்கூறுகளின் நிரல் | | |
| 7 | சுயாதீன தராதர அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடமொன்றிலிருந்தான அடக்கக்கூறுப்பகுப்பாய்வு அறிக்கை | | |
| 8 | வேறு எவையேனும் இயைபான ஆவணங்கள் (குறித்துரைக்கவும்) உதாரணம்: தேமஔஅ கடிதம் | | |
| 9 | விண்ணப்பக் கட்டணக் கொடுப்பனவின் பற்றுச்சீட்டு (பொது 172) | | |
| 10 | பிரதான நிறைவேற்று அலுவலரினால் விண்ணப்பதாரருக்கு அதிகாரமளிக்கும் அலுவலகமுறையான கடிதமொன்று | | |

திகதி:.......................

..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்*
தே.அ.அ.இல
கம்பனி இலச்சினை

*பிரதான நிறைவேற்று அலுவலர் (பிநிஅ)
அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் பேராளர்

---

அலுவலகப் பயன்பாடு

விண்ணப்ப இலக்கம்

**படிவம் ஆ**

| குறிப்பீட்டு இலக்கம் |
|---|
| விண்ணப்ப இலக்கம் |

**உணவு உற்பத்திப் பொருளொன்றின் சுகாதார உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஊட்டப்பொருள் தொழிற்பாட்டு உரிமைக்கோரிக்கைகள் அடங்கிய விளம்பரத்துக்கான அங்கீகாரக் கடிதம்**

கீழே குறிப்பிடப்பட்ட உரிமைக்கோரிக்கை /உரிமைக்கோரிக்கைகளுடன் மட்டுமே சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி /மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட விளம்பரம் / கதைச்சித்தரிப்பு அட்டைக்கு (சான்றுப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளது) கண்டிப்பாக அமைந்தொழுகுவதன்மூலம்.............................(ஊடகம்) இல் .............(வர்த்தக /வியாபாரப் பெயர்) என்ற வர்த்தகப் பெயரின்..............................(பொதுப்பெயர்) என்ற உணவுப்பொருளை விளம்பரப்படுத்துவதற்கு ........................... (கம்பனி பெயர் மற்றும் முகவரி) என்னும் இடத்தைச் சேர்ந்தவரும் ..............................என்னும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக்கொண்டவருமான திரு /திருவாட்டி .............................. (விண்ணப்பதாரரின் பெயர்) என்பவருக்கு இந்நாளன்று இத்தால் அங்கீகாரம் அளிக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகள்

1.........................................................
2.........................................................
3.........................................................
4.........................................................

இவ்வங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகுமென்பதுடன், 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும்...........ஆம் ஆண்டின் .......ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் விதித்துரைக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகளிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைந்தனவையுமாகும்.

தயாரிப்பின் அடக்கக்கூறில், போசணைசார் விளைவில், உள்ளீடுகளில், எந்த விளம்பரம் அல்லது கதைச் சித்தரிப்பு அட்டைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதோ அந்த விளம்பரம் அல்லது கதைச் சித்தரிப்பு அட்டையின் மொழியில் மற்றும் வடிவத்தில் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத மாற்றம் செய்யப்படின், இவ்வங்கீகாரக் கடிதம் வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும்.

..............................
வழங்கப்பட்ட திகதி

..............................
பிரதான உணவு அதிகாரி /உணவு கட்டுப்பாட்டு நிருவாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்

**படிவம் இ**

| குறிப்பீட்டு இலக்கம் |
|---|
| விண்ணப்ப இலக்கம் |

**உணவு விளம்பரத்துக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

| | | |
|---|---|---|
| 1. | உணவுப் பொருளின் பொதுப் பெயர் | |
| 2. | உணவுப் பொருளின் வர்த்தக /வியாபாரப் பெயர் | |
| 3. | முன்னைய அங்கீகாரம் அளிக்கப்பட்ட திகதி | |
| 4. | முன்னைய அங்கீகாரம் முடிவுறும் திகதி | |
| 5. | புதுப்பித்தல் கட்டணக் கொடுப்பனவின் பற்றுச்சீட்டு இலக்கம் (பொது 172) (பற்றுச்சீட்டை இணைக்கவும்) | |
| 6. | பிரதான நிறைவேற்று அலுவலரினால் விண்ணபதாரருக்கு அதிகாரமளிக்கும் அலுவலகமுறையான கடிதம் | |

1. விண்ணப்பதாரர்* (உற்பத்தியாளர் /பொதியிடுநர் /விநியோகிப்பாளர் /இறக்குமதியாளர்):

கம்பனியின் பெயர்

விண்ணப்பதாரரின் பெயர்

விண்ணப்பதாரரின் தே.அ.அ.இல.

முகவரி:

தொலைபேசி இல: கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல்:

2. விளம்பரப்படுத்தல் முகவராண்மை /முகவராண்மைகள்: (ஒன்றுக்கு மேற்பட்ட முகவராண்மைகள் இருப்பின் தனிவேறான பட்டியலை இணைக்கவும்)

பெயர்:

தொடர்புகொள்ளவேண்டிய ஆளின் பெயர்:

தொடர்புகொள்ளவேண்டிய ஆளின் தே.அ.அ.இல.

முகவரி:

தொலைபேசி இல: கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல்:

3. உணவு உற்பத்திப்பொருளின் உற்பத்தியாளர் (இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைக்கு மட்டும்):

பெயர்:

முகவரி:

தொலைபேசி இல: கையடக்கத்தொலைபேசி:

மின்னஞ்சல்

4. மூலநாடு (இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கு மட்டும்):

5. விளம்பரமுறை:

| | முறை | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| I. | காணொளி | | |
| II. | வட்டு ஒலித்தொகுப்பாளர் (DJ) உட்பட கேட்பொலி | | |
| III. | நிலைப்படம் /காட்சி வில்லை /அச்சு | | |

6. விளம்பரம் காட்சிப்படுத்தப்படும் ஊடகங்களின் பெயர்கள்:

| | ஊடகங்கள் | பெயர் /பெயர்கள் |
|---|---|---|
| I. | தொலைக்காட்சி | |
| II. | வானொலி | |
| III. | செய்தித்தாள்கள் | |
| IV. | சமூக ஊடகம் | |
| V. | வேறு ஏதேனும் | விளம்பரப் பலகைகள், விளம்பரச் சட்டப் பலகைகள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், சிற்றேடுகள், வேறு ஏதேனும் (குறித்துரைக்கவும்).......... |

7. விளம்பரப்படுத்தும் மொழிகள் (குறியிடவும்):

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

கடைசி அங்கீகாரத்திற்குப் பின்னர் தயாரிப்பின் அடக்கக்கூறுக்கும் விளம்பரத்தின் வடிவத்துக்கும் மாற்றங்கள் எவையும் செய்யப்படவில்லையென இத்தால் நான் சான்றுப்படுத்துகிறேன் என்பதுடன் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட விளம்பரத்தை புதுப்பிப்பதற்காகக் கோருகின்றேன்.

திகதி.................................... ....................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்*
தே.அ.அ.இல
கம்பனி இலச்சினை

*பிரதான நிறைவேற்று அலுவலர் (பிநிஅ)
அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் பேராளர்

**பின்னிணைப்பு ஈ**

**கட்டணங்கள்**

1. விண்ணப்பத்துக்கான செய்முறைப்படுத்தற் கட்டணம் - ஒவ்வொரு மொழிக்கும் ரூபா 25,000/- (மீளளிக்கப்படத்தக்கதல்ல)

2. விளம்பரத்தின் திருத்தப்பட்ட மாதிரிக்கான செய்முறைப்படுத்தற் கட்டணம் (மீளச்சமர்ப்பிப்பு) - ரூபா 25,000/- (மீளளிக்கப்படத்தக்கதல்ல)

3. அங்கீகாரக் கடிதம் வழங்குவதற்கான கட்டணம்

| | விளம்பரப்படுத்தல் முறை | ரூபா |
|---|---|---|
| I. | காணொளி | ரூபா 100,000.00 |
| II. | வட்டு ஒலித்தொகுப்பாளர் (DJ) உட்பட கேட்பொலி | ரூபா 75,000.00 |
| III. | நிலைப்படம் /காட்சி வில்லை /அச்சு /விளம்பரப்பலகை | ரூபா 50,000.00 |

4. அங்கீகாரக் கடிதத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் - ரூபா 50,000/-

அங்கீகாரக் கடிதத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் அங்கீகாரக் கடிதத்தின் செல்லுபடியாந்தன்மை முடிவுறுவதற்கு ஆறு (6) மாதங்களுக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

5. அங்கீகாரக் கடிதத்தின் மூலப்பிரதி சேதத்துக்குட்பட்டிருப்பின் அல்லது காணாமற்போயிருப்பின் அதன் இணைப் பிரதியொன்றிற்காக 2000/- ரூபாக் கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அங்கீகாரத்தின் பிரதி "இணைப்பிரதி" என்ற சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 02 - 0150

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.